வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu








Email : news@eelanadu.lk | மலர் : 01 | 07.08.2021 சனிக்கிழமை | இதழ் : 246 | பக்கங்கள் : 16


## கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்காவிடின் இரண்டு வாரங்களில் நிலைமை மோசமாகும்!

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 07

கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை மீண்டும் விதிக்காவிட்டால் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவும் என்று இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது.

பெரும்பாலான சுகாதாரத் துறை ஊழியர்களும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கூறினார்.

எதிர்காலத்தில் 15

## சந்நிதி அன்னதான மடம் 'சீல்'!

யாழ்ப்பாணம், ஓக. 07

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் அன்னதான மடமொன்று நேற்று சுகாதாரப் பிரிவினரால் சீல் வைக்கப்பட்டது.

மோகன் மடத்தில் சுகாதார விதிமுறைகளை மீறியும், யாசகர்களுக்கு உணவளிக்க வழங்கப்பட்ட சிறப்பு ஏற்பாட்டை துஷ்பிரயோகம் செய்தும் அன்னதானம் வழங்கியதால் அன்னதான மடம் 'சீல்' வைக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையினர் தெரிவித்தனர்.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் 15

# நாடு மீண்டும் முடங்காது!



## கோவிட் கட்டுப்பாட்டு செயலணி அறிவிப்பு

- திருமண நிகழ்வில் அதிகபட்சம் 150 பேர்
- மரண சடங்குகளில் 25 பேருக்கே அனுமதி
- சகல அரச விழாக்களும் பிற்போடப்பட்டன

கொழும்பு, ஓகஸ்ட் 07

நாட்டை மீண்டும் முடக்காது, உடன் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய கட்டுப்பாடுகளை இராணுவத் தளபதியும் தேசிய கோவிட் கட்டுப்பாட்டு செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். 15

## யாழ்ப்பாணத்தில் 66 பேர் உட்பட வடக்கில் நேற்று 87 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஓக. 07

யாழ்ப்பாணத்தில் 66 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று மட்டும் 87 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் நேற்று நடத்தப்பட்ட பரிசோதனையிலேயே இந்த விவரங்கள் வெளிவந்தன.

யாழ். போதனா வைத்தியசாலையில் 603 பேரின் மாதிரி 15

## மேலும் 98 பேர் உயிரிழப்பு; நாளாந்தம் எகிறும் மரணம்

கொழும்பு, ஓக. 07

நாட்டில் மேலும் 98 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது. 15

## ரஞ்சனுக்கும் கொரோனா!

கொழும்பு, ஓக. 07

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கும் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அங்குனுகொலபெலஸ்ஸ சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்காக நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் அவர், தற்போது அங்குனுகொலபெலஸ்ஸ கோவிட் -19 சிகிச்சை மையத்தில் சிகிச்சைப் பெற்று வருவதாக சிறைச்சாலை செய் 15

## மூன்றாவது தடுப்பூசி தேவைப்பட்டால் அதற்கும் அரசாங்கம் தயாராக உள்ளது

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 07

"18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும், செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் இரண்டு தடுப்பூசிகளையும் வழங்கக்கூடிய அளவுக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. மூன்றாவது தடுப்பூசியை வழங்க வேண்டி ஏற்பட்டாலும், அதற்கும் அரசாங்கம் தயாராக உள்ளது" என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள் 15

## நேற்று 2, 792 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஓக. 07

நாட்டில் மேலும் 2 ஆயிரத்து 792 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் 15

## சட்ட விரோதமான கைதுகள் இடம்பெற்று வருகின்றன

### சபையில் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 07

மாணவர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், விரிவுரையாளர்கள் என சகலரையும் சீருடையில் இல்லாத பொலிஸார் கடத்தி செல்கின்றனர். சந்தேகத்திற்கு இட 15

## இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவை குறித்து இறுதி முடிவு இல்லை

### வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே

கொழும்பு, ஓக. 07

தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையே கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் இந்தியத் தரப்பில் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் துறைமுக அமைச்சு இது தொடர்பில் இறுதி முடிவுக்கு வரவில்லை என வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

அதேவேளையில், இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவராக மிலிந்த மொறகொட இம்மாதம் 15 ஆம் திகதி பதவியேற்பார் எனவும் 15


உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

'யாழ். மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தடுப்பூசி அட்டை வைத்திருப்பது கட்டாயம். மருத்துவமனைகள், சில அரச திணைக் களங்களில் சேவைகளைப் பெறவும், பொது இடங் கள், சிறப்பு அங்காடிகள், பொதுச் சந்தைகளுக்கு செல்லவும், பேருந்துகளில் பயணிக்கவும்கூட தடுப்பூசி அட்டை அவசியம்.'

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன்.

கொரோனா வைரஸ், புதிதுபுதிதாக உருமாறி முழு உலகையுமே ஆட்டிப்படைத்து வரும் இவ்வேளை யில் அதன் தாக்கம் யாழ்ப்பாணத்திலும் பிரதிபலித்து வருகின்றது.

தினசரி தொற்றுக்குள்ளாவோர் மட்டுமன்றி, மரணிப்பவர்கள் தொகையும் அதிகரித்து வருகின்ற இவ்வேளையில், நம்மவர்கள் பலர் தடுப்பூசி செலுத்திக்கொள்வதில் நாட்டம் கொள்வதாகத் தெரியவில்லை.

தொற்றுக்கு உள்ளாவோர் இரண்டு வாரங்களில் குணமடைந்து வருவதும், இன்னும் சிலர் எதுவித அறிகுறிகள் இல்லாமலே தொற்றுக்கு உள்ளாகி பின்னர் குணமடைவதும் நம்மவர்களை அந்த நோய் பற்றிய பயத்தைப் போக்கியிருக்கின்றது.

ஆனால், ஏற்கனவே தொற்றா நோய்கள் உள்ளவர்கள் தொற்றுக்கு உள்ளாகினால் அது அவர்களுக்கு ஆபத்தாக முடியும் என்பதால் நீங்கள் மற்றவர்களுக்கு தொற்றைக் கொடுக்கும் காவி களாகவும் இருக்கலாம். அதனால், அவர்கள் உயிரிழக்க நேரிட்டால் அது கொலைப் பாவத்திற்கு சமனானது என்பதையும் இந்தப் பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

இதுவரை காலமும் தடுப்பூசிகளைப் பெறுவதில் நாடு எதிர்கொண்டிருந்த நெருக்கடியிலிருந்து மீண்டு, தற்போது தாராளமாக தடுப்பூசிகள் கிடைத்து வருகின்றபோதிலும் நம்மவர்கள் தடுப்பூசி போடுவதில் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

வெளிநாடுகளுக்கு செல்வதற்காக காத்திருப் பவர்கள், அதுவே தமது இலட்சியம் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களும் நம் மத்தியில் இல்லாமல் இல்லை. அவர்கள் எல்லோருமே, தற்போது கிடைக்கும் சினோபார்ம் தடுப்பூசியை ஏற்றிக் கொண்டால் தாங்கள் வெளிநாடு செல்லமுடியாது என்று கருதிக்கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

சினோபார்ம் தடுப்பூசியை சில நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும், அந்த தடுப்பூசி உலக சுகாதார நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்பதால் அதனைப் போட்டுக்கொண்ட வர்கள் தமது நாட்டுக்குள் வரமுடியாது என்று உத்தரவிடப் போவதில்லை.

சிலவேளைகளில் அவ்வாறு நாடுகளுக்கு சென்றால் அங்கே மீண்டும் அந்தந்த நாடுகள் அங்கீகரித்த தடுப்பூசிகளை மீண்டும் போடவேண்டிவரலாம். அதற்காக தற்போது நாங்கள் தடுப்பூசி போட மாட்டோம் என்று அடம்பிடிப்பது எந்த வகையிலும் நியாயமானது அல்ல.

யாழ்ப்பாண அரச அதிபரின் அறிவிப்பைப் பாத்த நண்பர் ஒருவர் சொன்னார், இனி தடுப்பூசி அட்டை களையும் களவாக விநியோகிப்பதற்கு சிலர் முயற்சி எடுக்கப்போகிறார்கள் என்று.

யாழ்ப்பாணத்தில் மரண வீடுகளில் அழுவதற்கா கவும் ஆட்களை ஒழுங்கு செய்து கொடுப்பவர் அவர், அவர் சொன்னார், இனி ஊசி போடாதவர்கள் சுப்பர் மார்க்கெட் போகமுடியாது என்பதால், அவர்களுக்கு கடைக்கு சென்று பொருட்களை வாங்கிவருவதற்கும் தான் ஆட்களை கொடுக்கப்போகிறராம்.!

- **ஊர்க்குருவி**

# மக்கள் மனதில் வெறுப்பு ஏற்படாது செயல்பாடுகளை முன்னெடுப்போம்!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 07

"கொரோனா அபாயகர மான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு சமூக முன்னோடி களாக நடந்துகொள்வோம். சாதாரண மக்கள் மனதில் வெறுப்பு ஏற்படாதவகையில் எமது செயல்பாடுகளை முன்னெடுப்போம்", என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த சங்கம் நேற்று விடுத்த செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"இறைவன் திருப்பணிக்குச் சமனான பணியை மேற்கொள் ளும் நாம் சமூகத்தில் உயரிய அந்தஸ்து உள்ளவர்களாக இருக்கின்றோம். தெரிந்தோ தெரியாமலோ தற்போதைய சூழ்நிலையிலும் எங்களால் முடிந்ததை எதிர்கால சந்ததிக் காக வழங்கிக் கொண்டிருக் கிறோம்.

இன்று எம்மில் எண்பது வீதமானவர்களாக பெண் ஆசிரியர்கள் உள்ளமையை யாவரும் அறிவோம்.

அவர்களுக்கு இரட்டிப்பு சுமைகள், பெற்ற குழந்தைகளை யும், நம்பி வந்த குழந்தைகளை யும் சமமாகப் பார்க்கும் பக்கு வம் அவர்களுக்கே உரித்தா னது. அதிலும், தமிழ் பேசும் பெண் ஆசிரியர்கள் சமூகத்தில் உயரிய மதிப்பிற்கும், மரியா தைக்கும் உரியவர்களாக உள்ள னர் என்பதனை எவராலும் மறுத்துரைக்க முடியாது.

தற்போது நாட்டில் ஏற்பட் டுள்ள அபாயகரமான சூழ்நிலை களால் அனைவருமே மரண பயத்தில் உள்ளனர். இச்சமயத் தில் ஆசிரியர்களாகிய நாமே அறிவு சார்ந்தவர்களாக பாமர மக்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும். நாட்டில் உள்ள அநேக அரச அலுவலகங்களில் தொற்றா ளர்கள் இனங்காணப்படுகின் றமை சர்வ சாதாரணமாகிவிட் டது.

இன்று (நேற்று) மட்டும் நூற்று எழுபத்தேழு டெல்டா தொற்றாளர்கள் இனங்காணப் பட்டுள்ளனர். இந்த நிலையில் கல்வி அமைச்சு வறிய மாண வர்களுக்கு உருவாக்கிய கற்றல் வள நிலையம் கேள்விக் குறியாகியுள்ளது. அதிகாரிகளின் நெருக்கீடுகள் அதிபர்கள், ஆசி ரியர்களை மன உளைச்சல்களுக்கு உட்படுத்தியுள்ளது.

இத்தகைய நிலையில் ஒட்டு மொத்த மக்களும் ஆசிரியர்கள் மீது வசைபாட ஆரம்பித்துள்ள னர். இவற்றை நிவர்த்தி செய்ய கொரோனா அபாயகரமான சூழ் நிலைகளைக் கருத்தில்கொண்டு சமூக முன்னோடிகளாக நடந்து கொள்வோம். சாதாரண மக்கள் மனதில் வெறுப்பு ஏற்படாத வகையில் எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம் - என்று தெரி வித்துள்ளது. (ஐ)

## இலங்கையில்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்திய பணிப்பாளர் யாமினி மிஸ்ரா இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக குறிப்பிடுகையில் வலிந்து காணமல் ஆக்கப்பட் டோர் குறித்த நாடுகளின் பட்டியலில் இலங்கை உலகில் இரண்டாவது இடத்தில் இருப் பதாகத் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட் டோர் தொடர்பாக மட்டு மல்ல. ஆட்கடத்தல், நீதி விசார ணைகளின்றி தடுத்து வைத்தி ருத்தல், இன ரீதியான பாகு பாடுகள் சம்பந்தமாகவும் இலங்கை உலகில் முன்னணி நாடுகளில் ஒன்றாக இருக்கின்ற தென்றே அழுத்தம் திருத்தமாக குறிப்பிடமுடியும்.

### கல்வி TV CHANNEL-1

**07.08.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2

**07.08.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu 07.08.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## மக்கள்தான் மக்களுக்கு துணை?

நாடு மீண்டும் திறக்கப்பட்டதை தொடர்ந்து, நிலைமைகள் முன்னேற்றம் ஏற்படலாம் என்னும் நம்பிக்கை காணப்பட்டது. ஆனால், ஒரு சில தினங்களிலேயே மீண்டும் நிலைமைகள் மோசமடைந்திருக்கின்றன. வெளிவரும் செய்திகள் அச்சத்தை தருவதாக அமைந்திருக்கின்றன. மீண்டும் ஒரு முடக்கத்தை நோக்கி நாடு செல்லக்கூடுமோ என்னும் சந்தேகங்களும் எழுகின்றன. ஒருபுறம் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தொடருகின்ற அதேவேளை, கொரோனா தொற்றாள்களின் எண்ணிக்கையும் அதிகரித்து செல்கின்றது. மரணங்களும் அதிகரிக்கின்றன.

நாடு ஏற்கனவே பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது. இந்த நிலையில் மீண்டும் ஒரு முடக்கம் ஏற்பட்டால் நிலைமைகள் அதலபாதாளத்திற்கு சென்றுவிடும். நிலைமைகள் மோசமடைந்தால் நாட்டை முடக்குவதைத் தவிர வேறு தெரிவுகளும் இருக்காது. மக்கள் மத்தியில் பஞ்சம் ஏற்பட்டாலும்கூட அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இவ்வாறான ஒரு சூழலில் நாட்டில் ஆங்காங்கே மக்கள் போராட்டங்களும் இடம்பெறுகின்றன. குறிப்பாக அதிபர், ஆசிரியர்களின் போராட்டம் தொடர்கின்றது. இதனை முறியடிக்கும் வகையில் ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு அழைக்கப்படுகின்றனர்.

தடுப்பூசியால் தொற்றுப் பரவலை கடுப்படுத்த முடியாது என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். அது ஒரு நோயின் தாக்கத்திலிருந்து மீள்வதற்கான ஒரு பாதுகாப்பு மட்டுமே. எனவே, தடுப்பூசி எடுத்துக் கொண்டாலும் அவதானமாக இருந்தால் மட்டும்தான் மக்கள் தப்பலாம். எனவே, எவரும் எவரையும் பாதுகாக்க முடியாது. அவரவர்தான் அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் கொரோனா செயலணியை கலைத்துவிடுமாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். ஒரு வகையில் பார்த்தால் கொரோனா செயலணி தோல்வியடைந்திருப்பதான தோற்றமே தெரிகின்றது. ஏனெனில், கொரோனா பரவலை தடுக்கக்கூடிய வழிமுறைகள் எவற்றையும் அரசாங்கத்தினால் கண்டடைய முடியவில்லை. இந்த நிலையில் மக்கள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளலாம்?

ஒவ்வொருவரும் முதலில் இந்த நாட்டின் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கேற்ப தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். தற்போதைய சூழலில், இதனைத் தவிர, வேறு தெரிவுகள் எதுவுமில்லை. ஏனெனில், நிலைமைகள் கட்டுக்குள் இல்லை. மக்கள் தங்களின் ஆடம்பர நிகழ்வுகள், களியாட்டங்கள் அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டும். வீதிகளில் தேவையின்றி கூடுவது, அரட்டையடிப்பது அனைத்தையும் தவிர்க்க வேண்டியிருக்கின்றது. எவ்வளவிற்கு ஒன்றுகூடுதல் தவிர்க்கப்படுகின்றதோ அந்தளவிற்கு வைரஸிலிருந்து பாதுகாப்பு பெறலாம்.

இதனை அரசாங்கம் அறிவுறுத்தும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. நிலைமைகளை விளங்கிக்கொண்டு, ஒவ்வொருவரும் தாங்களாகவே இந்த விடயங்களை பொறுப்புடன் அணுக வேண்டும். மக்கள் தங்களின் பொறுப்பை உணர்ந்து செயல்பட்டால் நிலைமைகளை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயல்படுவதன் மூலம்தான் தாங்களும் காப்பாற்றப்பட்டு மற்றவர்களையும் காப்பாற்றலாம்.

நிலைமைகளை எடுத்து நோக்கினால் சில வருடங்கள் கொரோனாவுடன்தான் வாழ வேண்டிவரும்போல் தெரிகின்றது. இதற்கேற்ப மக்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

# இலங்கையில் காணாமலே ஆக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர்!

அலசுவது இராஜதந்திரி

*இலங்கையில் 2008ஆம் ஆண்டு மற்றும் 2009ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கொழும்பில் காணாமல் ஆக்கப்பட்ட 11 தமிழ் இளைஞர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு தற்போது நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.*

*இதுகுறித்து சர்வதேச மன்னிப்புச் சபை தனது ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் வழக்கில் முக்கிய சந்தேகநபராகக் குறிப்பிடப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மீது எவ்வித வழக்கையும் தொடர்ந்து முன்னெடுக்க முடியாதென சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்திருந்தது.*

*இது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய - பசுபிக் பிராந்திய பணிப்பாளர் யாமினி மிஸ்ரா தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளதோடு, உலகில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் பட்டியலிடப்பட்ட நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தை வகிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.*

*இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய தேடுதல்கள் நீண்டநெடுங்காலமாகவே இடம்பெற்றுவருகின்றன. வடக்கு - கிழக்கு யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் எண்ணிக்கை அளவு கடந்ததாக ஒருபுறம் இருக்க தென்னிலங்கையில் 80களின் இறுதிப்பகுதிகளிலும் 90களி லும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) அமைப்பைச் சேர்ந்த இளைஞர்களும் எண்ணிலடங்காதளவு காணாமல் ஆக்கப்பட்டிருந்த னர்.*

**ஆணைக்குழுக்கள்**

*1995ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாடாளாவிய ரீதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக விசேட ஆணைக்குழுக்களை அமைத்திருந்தார்.*

*வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கும் நீதியரசர் கி. பாலகிட்ணர் தலைமையிலான ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த ஆணைக்குழு உட்பட ஏனைய மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழுக்கள் தமது அறிக்கைகளை அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளித்திருந்தன. ஆனால், அந்த அறிக்கைகளின் அடிப்படையில் எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.*

*காணாமல் ஆக்கப்பட்டோர் கண்டுபிடிக்கப்படவுமில்லை. கூடவே காணாமல் போகச்செய்தோர் தொடர்பாக ஆணைக்குழுக்களினால் சிபாரிசு செய்யப்பட்ட சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுமில்லை. இதைவதவிர, காணாமல் ஆக்கப்பட்டோர் கண்டுபிடிக்கப்படவில்லையானால் அவர்களைச் சார்ந்தோருக்கு தகுந்த நிவாரண உதவிகளை வழங்க வேண்டுமெனவும் ஆணைக்குழுக்கள் சிபாரிசு செய்திருந்தன. ஆனால், சிபாரிசு செய்யப்பட்ட நிவாரண உதவிகள் கூட வழங்கப்பட்டிருக்கவில்லை.*

*எனவே, காணாமல் ஆக்கப்பட்டோர் காணாமலேயே ஆக்கப்பட்டுள்ளனர் என்பதை உறுதிசெய்வது போலவும், அவர்களை இனித்தேடுவதில் எவ்வித பயனுமில்லை என்பது போலவுமே, கொழும்பில் 2008ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்ட பதினொரு தமிழ் இளைஞர்கள் தொடர்பான விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கப் போவதில்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*சட்ட மா அதிபர் திணைக்களத்தின் இந்த அறிவிப்பு, காணாமல் ஆக்கப்படட பதினொரு இளைஞர்கள் தொடர்பாக முக்கிய சந்தேகநபராக அறிவிக்கப்பட்டிருந்த முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவை குற்றவாளியாக காணமுடியாது என்ற தோரணையிலும் காணப்படுகின்றது.*

*கொழும்பில் காணாமல் ஆக்கப்பட்ட பதினொரு தமிழ் இளைஞர்கள் தொடர்பான விசாரணைகள் முன்பு மேற்கொள்ளப்பட்ட போது அந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களை இலகுவில் இனங்காணும் விதத்தில் பல திடுக்கிடும் தகவல்கள் தகுந்த ஆதாரங்களுடன் வெளியாகியிருந்தன.*

*ஆனால், இடைநடுவில் அந்த விசாரணைகள் கைவிடப்பட்டு தற்போது முற்றுமுழுதாக அவ்விசாரணைகள் முடிவுக்கு வந்துள்ளன.*

*இதுதவிர, காணாமல் ஆக்கப்பட்டோரைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கில் யாரும் எவ்வேளையிலும் காணாமல் ஆக்கப்படலாம் என்ற நிலையே காணப்பட்டிருந்தது.*

**வடக்கு - கிழக்கில்**
**காணாமல் ஆக்கப்பட்டோர்**


*சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் ஒரு புறமிருக்க, வடக்கு - கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய ஆயுதப் போராட்ட அமைப்புகளால் கடத்திச்செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் எண்ணிக்கையும் அதிகமானமாகவே இருக்கின்றது.*

*இதுதவிர, வன்னியில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஆயுதப் படையினர் கொடுத்த பாதுகாப்பு உத்தரவாதத்தின் அடிப்படையில் சரணடைந்த நூற்றுக்கணக்கானவர்கள்கூட காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இதுவரை அவர்கள் பற்றிய விபரங்கள் எதுவும் தெரியாமலேயே இருந்து வருகின்றன.*

*இத்தகைய பின்னணியிலேயே சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய - பசுபிக்*

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
எதிரிகள் அடங்குவர். தன்னம்பிக்கை அதிகரிக்கும். அதிர்ஷ்டமான, அமைதியான நாள். எண்ணம் ஒன்று நிறைவேறும். பகைவர் மனம் மாறி முன்வந்து நட்பாக வாய்ப்புண்டு.

**இடபம்**
எடுத்த முயற்சி வெற்றி பெறும். பணிவாகப் பேசி நன்மையடைவீர்கள். அலுவலக முன்னேற்றம் பற்றிய கவலை ஒன்று நீங்கும். அரசாங்கத்தின் உதவி தாமதத்துக்குப்பின் கிடைக்கும்.

**மிதுனம்**
புதிதாக அறிமுகமான நண்பர்கள் உதவி கேட்டு வருவர். யாரிடமும் பிடிவாதமின்றி வளைந்து கொடுத்துப் போவீர்கள்.சிரமம் ஒன்றிலிருந்து விடுபட்டு மன நிம்மதியடைவீர்கள்.

**கடகம்**
நட்பை மதிக்காதவர்களை நினைத்து வருந்த வேண்டாம். நம்பிக்கை இழக்காமல் சவாலான முயற்சிகளைத் தொடர்வீர்கள். நீண்ட நாள் கவலை தீர்வது குறித்து மகிழ்ச்சி ஏற்படும்

**சிம்மம்**
கோபிக்க வேண்டிய நேரகளில் அமைதி காத்து வெல்வீர்கள். மன நிம்மதி மீளும். விட்டுப்போன தொடர்புகளைப் புதுப்பிப்பீர்கள்.மகளின்/ மகனின் போக்கு மாறி திடீர் மகிழ்ச்சி அளிக்கும்

**கன்னி**
எதையும் அதிக முயற்சிக்குப்பின்தான் முடிக்க இயலும். உழைப்புக்கேற்ற வருமானம் கிடைக்கவில்லை என வருந்தாதீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். தகவல் ஒன்று மகிழ்ச்சி தரும்.

**துலாம்**
புது முயற்சி சற்றுத் தள்ளிப்போனால் அது நன்மைக்கே. தாயாருக்கு நன்மை ஏற்படும். பிடிவாதத்தை விடவேண்டும். மிகவும் வேண்டியவர்களின் வாழ்வு மேம்படுவதைக் கண்டு மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்**
குடும்பத்தினரின் செயலால் குடும்ப கௌரவம் உயரும். வெளிநாட்டில் உள்ளவர்கள் பெற்றோரைச் சந்திப்பீர்கள். நேற்றைய மன பாரம் விலகி நிம்மதி உண்டாகி செயல்களில் தெளிவு வரும்.

**தனுசு**
எந்தச் செயல்பாட்டிலும் பதற்றமோ அவசரமோ கூடாது. புது முயற்சி வெல்லும். பழிகளைத் துடைத்தெறிந்து நிமிர்வீர்கள். எண்ணம் ஈடேறும். தவறிப்போயும் தீயவர் நட்பு வராதபடி கவனமாக இருங்கள்.

**மகரம்**
பேசும் வார்த்தைகளால் நன்மையும் லாபமும் கூடும்.லோன் போட்டிருந்தால் எளிதாகக் கிடைக்க நண்பர் உதவுவர். உடல் உழைப்பை நம்புபவர்களுக்கு நன்மை பெருகும்.

**கும்பம்**
பலவித நிகழ்வுகள் ஒரே நாளில் நிகழ்வதால் மகிழ்வீர்கள். பெரிய திட்டம் ஒன்றைக் கையில் எடுத்துச் செய்ய ஆரம்பிப்பீர்கள் வெளிநாட்டிலிருந்து இனிக்கும் செய்தி வந்து மகிழ்விக்கும்.

**மீனம்**
எது செய்தாலும் அதை மிக நேர்மையாகச் செய்யுங்கள். நினைத்தது நடைபெறுவதற்கான அடையாளம் தெரியும். விலை உயர்ந்த அல்லது வாசனைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

# எழுவர் விடுதலையை வலியுறுத்தி புதிய பரிந்துரையை ஆளுநருக்கு அனுப்புங்கள்

## வலியுறுத்துகின்றார் பா.ம.க. தலைவர் எஸ்.ராமதாஸ்

சென்னை, ஓக. 07,

உச்ச நீதிமன்றத்தின் புதிய வழிகாட்டுதலின்படி, 7 தமிழர் விடுதலைக்குப் புதிய பரிந்துரையை ஆளுநருக்குத் தமிழக அரசு அனுப்ப வேண்டும் என, பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

“வாழ்நாள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள், 14 ஆண்டுகள் தண்டனைக் காலத்தை நிறைவு செய்யாவிட்டாலும், மாநில அமைச்சரவையின் பரிந்துரைப்படி அவர்களை விடுதலை செய்ய ஆளுநருக்கு அதிகாரம் உண்டு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்கள் விடுதலை தொடர்பான சிக்கலில் உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சும்.

அரியானாவைச் சேர்ந்த வாழ்நாள் சிறை தண்டனைக் கைதி ஒருவரை, குறைந்தபட்சம் 14 ஆண்டுகள் தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பாகவே, விடுதலை செய்வது தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

வாழ்நாள் சிறை தண்டனைக் கைதிகளை 14 ஆண்டுகளுக்கு பதிலாக 10 ஆண்டுகள் சிறை வாசத்தை நிறைவு செய்த நிலையில், விடுதலை செய்த நிகழ்வுகள் தமிழகத்தில் பலமுறை நடந்துள்ளன. அதனால், தமிழகத்தைப் பொறுத்தவரை இது புதிய விஷயமல்ல.

ஆனால், இத்தீர்ப்பில் அரசியலமைப்புச் சட்டத்தின் 161ஆவது பிரிவின்படி ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்தின் உதவியுடன் அவர் என்னென்ன முடிவுகளை எடுக்கலாம் என்பது பற்றி, உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள வழிகாட்டுதல்கள்தான் மிகவும் முக்கியமானவை.



குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 432 முதல் 435 வரையிலான பிரிவுகள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறைக்க வகை செய்கின்றன. அந்தப் பிரிவுகளின்படி செய்ய முடியாத தண்டனைக் குறைப்பைக் கூட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 161ஆவது பிரிவின்படி, மாநில அமைச்சரவையின் பரிந்துரையை ஏற்றுச் செய்வதற்கு ஆளுநர்களுக்கு அதிகாரம் உண்டு என்பதுதான் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின் மையக்கரு ஆகும்.

பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களை விடுதலை செய்வதற்காகத் தமிழக அமைச்சரவை அளித்த பரிந்துரை மீது முடிவெடுக்க முடியவில்லை என்று கூறி, அதைக் குடியரசுத் தலைவருக்குத் தமிழக ஆளுநர் அனுப்பி வைத்து விட்ட நிலையில், உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இந்தப் புதிய வழிகாட்டுதல் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தவறுதலாகத் தண்டிக்கப்பட்டு, 31 ஆண்டுகளாக சிறை தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளனை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 161ஆவது பிரிவின்படி விடுதலை செய்ய மாநில ஆளுநருக்கு அதிகாரம் உண்டு என்று கடந்த 2018ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் திகதி உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனடிப்படையில், 7 தமிழர்களையும் விடுதலை செய்யும்படி அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அமைச்சரவை, 09.09.2018 அன்று தீர்மானம் நிறைவேற்றி தமிழக ஆளுநருக்கு அனுப்பி வைத்தது.

ஆனால், அதன்பின் இன்று வரை 1,063 நாட்கள் ஆகியும் இந்த விஷயத்தில் ஆளுநர் எந்த முடிவும் எடுக்கவில்லை. மாறாக, இச்சிக்கலை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்து விட்டு ஆளுநர் ஒதுங்கிக் கொண்டார். 7 தமிழர் விடுதலை விவகாரத்தில் இது தவறு என்பதைத்தான் உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளது.

தண்டிக்கப்பட்ட கைதிகளின் தண்டனைக் குறைப்பு தொடர்பாக, மாநில அமைச்சரவையின் பரிந்துரைப்படி எத்தகைய முடிவை எடுக்கவும், 161ஆவது பிரிவின்படி ஆளுநருக்கு எல்லையில்லா அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

7 தமிழர் விடுதலை குறித்த தமிழக அமைச்சரவையின் பரிந்துரையும் 161ஆவது பிரிவின்படிதான் ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. 161ஆவது பிரிவு என்பது முழுக்க முழுக்க ஆளுநரின் அதிகாரம் சம்பந்தப்பட்டது. அவ்வாறு இருக்கும் போது 7 தமிழர் விடுதலை குறித்து ஆளுநர்தான் முடிவெடுத்திருக்க வேண்டும். அதை விடுத்து குடியரசுத் தலைவர் முடிவுக்கு அனுப்பிவைத்தது சரியல்ல.

கைதிகளின் தண்டனையைக் குறைத்து விடுதலை செய்ய ஆளுநருக்கு அதிகாரம் இருப்பதாக உச்ச நீதிமன்றம் மீண்டும் ஒருமுறை உறுதி செய்துள்ள நிலையில், 7 தமிழர் விடுதலைக்காக ஆளுநரை மீண்டும் வலியுறுத்துவதே சாதகமான தீர்வாகும்.

எனவே, முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவை உடனடியாகக் கூடி, 7 தமிழர்களை விடுதலை செய்யும்படி பரிந்துரை தீர்மானத்தை நிறை வேற்றி ஆளுநருக்கு அனுப்பி, அழுத்தம் கொடுக்க அரசு முன் வரவேண்டும் என வலியுறுத்துகிறேன்” என ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# அரசியலமைப்பின் உறுப்பு 161 இன் கீழ் புதிய தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்

## எழுவர் விடுதலை குறித்து விடுதலை சிறுத்தைகள்

சென்னை, ஓக 07,

பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரின் விடுதலைக்கு அரசியலமைப்புச் சட்ட உறுப்பு 161 இன் கீழ் புதிய தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என தமிழ்நாடு அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

“பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரையும் விடுதலை செய்யவேண்டுமெனத் தமிழ்நாடு அமைச்சரவைகூடி கடந்த 09.09.2018 அன்று தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியது. அதற்கு ஒப்புதல் அளிக்காமல் அவர் காலதாமதம் செய்துவந்த நிலையில் அதுகுறித்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பியதோடு தாங்களே உத்தரவு பிறப்பிப்போம் எனவும் கூறினர். அதனால் தமிழ்நாடு அரசின் தீர்மானத்தை ஆளுநர் தன்னிச்சையாகவும், அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராகவும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்ததார். இதனை நீதிமன்றத்தில் ஆளுநர் தனது பதிலாக தெரிவித்தார்.

இந்நிலையில் உச்ச நீதிமன்றம் 03.08.2021 அன்று ‘அரியானா-எதிர்- ராஜ்குமார்’ என்ற வழக்கில் மிகத் தெளிவான தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளது. 14 ஆண்டுகள் சிறைத்தண்டனையைக் கழித்த ஆயுள் சிறைவாசிகளை விடுதலை செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு என்று அந்தத் தீர்ப்பில் சொல்லப்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பின் அடிப்படையிலும், ” அரசியலமைப்புச் சட்ட உறுப்பு எண் -161 இன் கீழும் தன்னை விடுவிக்க வேண்டும் என பேரறிவாளன் தமிழ்நாடு அரசுக்கு அளித்த மனுவின் மீது மாநில அரசு விரைந்து முடிவெடுக்க வேண்டும்” என மீண்டும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனவே, இதனடிப்படையிலும், ஏற்கனவே உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் அளித்த தீர்ப்புகளின்படியும், 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடும் பேரறிவாளன் உள்ளிட்ட ஏழுபேரையும் விடுதலை செய்திட தமிழ்நாடு அரசு உடனே அமைச்சரவையைக் கூட்டி மீண்டும் புதிதாகத் தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.” என்றுள்ளது.

## அபாய நிலையில் ஆறு மாவட்டங்கள்

கொழும்பு, ஓக. 07

இலங்கையில் 6 மாவட்டங்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதென இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குருநாகல், புத்தளம், கொழும்பு, காலி, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளிலுள்ள கட்டில்களை விடவும் அதிகளவிலான கொரோனா நோயாளர்கள் பதிவாகி வருகின்றனரென அந்த சங்கத்தின் பிரதம செயலாளர் மஹேந்திர பாலசூரிய தெரிவிக்கின்றார்.

எனவே, நாடு தற்போது மிக மோசமான நிலையை நோக்கி நகர்ந்து செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# இலங்கையில் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் கொரோனாவால் மூவர் மரணிக்கும் அபாயம்!

## விசேட மருத்துவ நிபுணர் மனில்க சுமணதிலக தகவல்



**கொழும்பு, ஓக.07**

**இலங்கையில் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் மூன்று பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கின்ற பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டுள்ளது என இலங்கை மருத்துவ சபையின் உப தலைவர் விசேட மருத்துவ நிபுணர் மனில்க சுமணதிலக தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

"இலங்கையில் கடந்த காலத்தில் நாளாந்தம் 20 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்ட போதிலும் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் வரையிலான தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

எனினும், இன்று வெறும் 10 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளே நடத்தப்படும் போதிலும் 2 ஆயிரத்து 500 வரையிலான தொற்றாளர்கள் வரை அடையாளம் காணப்படுகின்றனர்.

அதுமாத்திரமன்றி, நாட்டில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கையைப் பாருங்கள். ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் சுமார் மூன்று பேர் மரணிக்கின்றனர்.

கடந்த இரண்டு நாட்களில் மட்டும் பதிவான மரணங்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது இந்த நிலைமையை நன்கு அவதானிக்க முடியும்.

கொரோனா வைரஸ் மற்றும் தடுப்பூசிக்கு இடையேயான போட்டியில் எமக்கு வெற்றி கிடைக்க வேண்டுமானால் இன்னும் குறுகிய காலம் பயணக் கட்டுப்பாடுகள் மட்டுமே சிறந்த பதில் அல்லது தனித்தனியாக சுய பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பது நல்லது" - என்றார்.

## சாதாரண சேவையில் கடவுச்சீட்டு வழங்கும் பணிகள் இடைநிறுத்தம்!

கொழும்பு, ஓக. 07

சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டு வழங்கும் பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் பல அதிகாரிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமையினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், அத்தியாவசிய சேவை தேவைகளைக் கொண்ட தனிநபர்களுக்கு மாத்திரம் கடவுச்சீட்டு ஒருநாள் சேவையின் கீழ் வழங்கப்படும்.

அதற்காக குறைந்த அளவிலான ஊழியர்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

## மேலுமொரு தொகுதி சினோபார்ம் தடுப்பூசிகள் நாட்டுக்கு வந்தன

கொழும்பு, ஓக. 07

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலுமொரு தொகுதி சினோபார்ம் தடுப்பூசிகள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன.

அதன்படி, 21 இலட்சத்து 40 ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசிகள் நேற்று வெள்ளிக்கிழமை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த தடுப்பூசிகள் இரண்டாவது டோஸாக நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

# நடிகைக்கு ஆடைகள் கொடுத்த அமைச்சர் கைதான ஆசிரியர்களுக்கும் கொடுப்பாரா?

## சபையில் நளின் பண்டார கேள்வி



கொழும்பு, ஓக. 07

பியூமி ஹன்சமாலிக்கு ஆடைகளை வழங்கிய அமைச்சர் சரத் வீரசேகர, கைது செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும் ஆடைகளை வழங்குவரா? என வினவிய எதிர்க்கட்சி எம்.பி நளின் பண்டார, 48 மணித்தியாலங்கள் ஒரே ஆடையை உடுத்திக்கொண்டு சரத் வீரசேகரவின் மனைவியால் இருக்க முடியுமா எனவும் வினவார்.

பாராளுமன்றத்தின் நேற்று முன்தினம் அமர்வில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஆசிரியர்களை நாசமாய் போனவர்கள் என்று திட்டும் அமைச்சர்களே அரசாங்கத்தில் இருக்கிறார்கள். போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் மாற்று ஆடைகள் இன்றி இருக்கிறார்கள்.

பியூமி ஹன்சமாலியை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அழைத்துச் செல்லும்போது அவருக்கு ஆடைகளை வழங்கிய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, இப்போது ஆசிரியர்களுக்கும் ஆடைகளை வழங்குவாரா? ஆசிரியர்களுக்கு மாற்றுவதற்கு உடைகள் இல்லை.

இதுபோல ஒரே ஆடையை அணிந்துகொண்டு இரண்டு நாட்களுக்கு சரத் வீரசேகரவின் மனைவிக்கு அல்லது பொலிஸ்மா அதிபரின் மனைவிக்கு, தேசபந்து தென்னக்கோனின் மனைவிக்கு இருக்க முடியுமா?.

கைது செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மாற்று ஆடைகளை வழங்குவதற்காகவே நாம் அங்கு சென்றிருந்தோம். ஆனால், எங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை-என்றார்.

# 100 நகர அபிவிருத்தி திட்டத்தில் கிளிநொச்சி, பூநகரியும் இணைப்பு

கொழும்பு, ஓக. 07

இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட 100 நகரங்களை அபிவிருத்தி செய்து அழகுபடுத்தும் திட்டத்தில் கிளிநொச்சியும், பூநகரியும் இணைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகரில் டிப்போ சந்தியும், பூநகரியில் வாடியடி சந்தியும் அபிவிருத்தி செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் இரண்டாம் நிலையிலுள்ள தெரிவு செய்யப்பட்ட நகரங்களை அபிவிருத்தி செய்து, அழகாக்குவது இந்தத் திட்டத்தின் பிரதான நோக்காகும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பொறுப்பின்கீழ் வரும் நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் இந்தத் திட்டம் நாடு முழுவதும் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதில், கண்டி, காலி, யாழ்ப்பாண மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட நகரங்களுக்கு உலக வங்கியின் நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வேலணை, மருதனார்மடம், கொடிகாமம், நாவற்குழி, நெல்லியடி உள்ளிட்ட நகரங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி டிப்போ சந்தி மற்றும் பூநகரி வாடியடியும் இதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த இரண்டு இடங்களையும் அபிவிருத்தி செய்து அழகுபடுத்துவதற்கான திட்ட வரைவுகள், வட மாகாண நகர அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ்.மாவட்ட தலைமை அலுவலகத்தினரால், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரான கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளன.

யாழ், கிளிநொச்சி மாவட்டங்களில் 100 நகர அபிவிருத்தித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின் பேரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் வேலணையில் கடந்த மாதம் இடம்பெற ஏற்பாடாகியிருந்த போதும், தவிர்க்க முடியாத காரணங்களினால் அது பிறிதொரு தினத்துக்குப் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பி.சி.ஆர், அன்ரிஜென் சோதனைகளுக்கு அடுத்த வாரத்தில் கட்டணம் நிர்ணயம்



கொழும்பு, ஓக. 07

பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் சோதனைகளுக்கு கட்டுப்பாட்டு கட்டணம் அடுத்த வாரம் நிர்ணயிக்கப்படும் என்று பாவனையாளர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் 21 மாவட்டங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பி.சி.ஆர். சோதனைகள் நடத்தும் 45 வைத்தியசாலைகளையும், அன்ரிஜென் சோதனைகளை நடத்தும் 43 வைத்தியசாலைகளையும் ஆய்வு செய்துள்ளனர்.

இதுபோன்ற சோதனைகளுக்கு ஒவ்வொரு வைத்தியசாலையும் வெவ்வேறு கட்டணங்களை வசூலிப்பது தெரியவந்துள்ளது.

அதன்படி, ஒரு பி.சி.ஆர் சோதனை 5 ஆயிரம் முதல் 9 ஆயிரத்து 500 ரூபாய் வரையிலும், அன்ரிஜென் பரிசோதனை 2 ஆயிரம் முதல் 5 ஆயிரத்து 900 ரூபாய் வரையிலும் அறவிடப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இதன்படி, அடுத்த வாரத்துக்குள் இதுபோன்ற ஆய்வுகளுக்கான விலைக் கட்டுப்பாட்டை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாவனையாளர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

# ஒரு நாளைக்கு 150- 200 உடல்களை தகனம் செய்யும் வசதி வேண்டும்!



## பேராசிரியர் சுனேத் அகம்பொடி கோரிக்கை

கொழும்பு, ஓக. 07

**இலங்கையில் ஒரு நாளைக்கு 150-200 உடல்களை தகனம் செய்யக்கூடிய வசதியை ஏற்படுத்தவேண்டிய நேரம் வந்து விட்டதாக பேராசிரியர் சுனேத் அகம்பொடி தெரிவித்துள்ளார்.**

**இலங்கையின் கொரோனா நிலைமைகள் தொடர்பாக தனது ருவிட்டர் பக்கத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

டெல்டா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் விடயத்தில் இலங்கை அரசு துணிச்சலான முடிவை எடுத்தது. இந்த சவாலின் ஒரு பகுதியாக ஒரு நாளைக்கு 150- 200 திறன் கொண்ட வெகுஜன தகனம் செய்யும் வசதியை உருவாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுனேத் அகம்பொடி, இராஜரட்டை பல்கலைக்கழகத்தின் மருந்துவ பீட புற்றுநோயியல் துறைப் பேராசிரியரும் தொற்றுநோயியல் நிபுணர் மற்றும் ஆராய்ச்சியாளர் என அனைவராலும் நன்கு அறியப்பட்டவராவார்.

# 10 இலட்சம் எரிவாயு கொள்கலன்கள் இறக்குமதி செய்வதற்கு தீர்மானம்

கொழும்பு, ஓக. 07

நாட்டுக்கு 10 இலட்சம் எரிவாயு கொள்கலன்களை இறக்குமதி செய்வதற்கு லிட்ரோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் தமது உற்பத்தியை பகிரும் செயற்பாட்டை நிறுத்தியுள்ள நிலையில் நுகர்வோருக்கு தேவையான எரிவாயுவை தட்டுப்பாடு இன்றி பகிர்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக லிட்ரோ நிறுவனம் குறப்பிட்டுள்ளது.

சந்தையில் எரிவாயு தட்டுப்பாடு நிலவுவதாக தகவல் வெளியானதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் ஒரு இலட்சத்துக்கும் அதிக எரிவாயு கொள்கலன்களை சந்தைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

(அ)

# மட்டக்களப்பில் வங்கிக்கு சென்ற பெண் சாக்கு மூடையிலிருந்து சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு, ஓக. 07

மட்டக்களப்பு வாழைச்சேனை வர்த்தக நிலையமொன்றில் சாக்கு மூடையிலிருந்து பெண்ணொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வர்த்தக நிலையத்தில் சந்தேகத்துக்குரிய விதத்தில் இரண்டு சாக்கு மூடைகள் இருப்பதாக கிடைத்த தகவலுக்கமைய, பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று சோதனை செய்தபோது குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது வாழைச்சேனை பகுதியில் காணாமல்போன 55 வயதான பெண்ணின் சடலமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

காணாமல்போன பெண் வங்கிக்குச் செல்வதாக கூறிச் சென்றுள்ளதுடன், வீடு திரும்பாத காரணத்தினால் அவரின் குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளரும், ஓட்டோ சாரதியொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பேருவளையில் 18 மசூதிகளுக்கு தற்காலிக பூட்டு

கொழும்பு, ஓக. 07

பேருவளை பகுதியில் உள்ள 18 மசூதிகள் தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளன. நாட்டின் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், தனி மனித மற்றும் சமூகத்தின் ஆரோக் கியத்தைக் கருத்திற்கொண்டும் இவ்வாறு மசூதிகளை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக சீன கோட்டை மசூதி சங்கத்தின் இணைச் செயலாளர் எம். எம்.எம்.ஷிஹாப் தெரிவித்தார்.

# சிறுவர் வைத்தியசாலையில் தினமும் 10-15 குழந்தைகள் தொற்றுடன் அனுமதி

கொழும்பு, ஓக. 07

பொரளை லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் நிலவரப்படி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 150 குழந்தைகள் சிகிச்சை பெற்று வருகின்றனரென அந்த வைத்தியசாலையின் குழந்தை மருத்துவர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்- 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் கொரோனாவுக்கு சிகிச்சை பெறுகின்றனர். குழந்தைகள் மருத்துவமனையின் நான்கு விடுதிகளில் குழந்தைகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்போதைய நிலையில் கோவிட் நோயால் பாதிக்கப்பட்ட 10 முதல் 12 குழந்தைகள் தினமும் வைத்தியசாலைக்கு வருகிறார்கள். இப்போது பாதிக்கப்பட்ட 150 குழந்தைகள் இங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். இங்கு வரும், வளர்ந்த குழந்தைகள் ராஜகிரியிலுள்ள குழந்தைகள் நோயாளி மையத்துக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

குழந்தைகளை தொற்றிலிருந்து பாதுகாக்கவேண்டியது பெற்றோரின் பொறுப்பு. வீட்டுக்குச் செல்லும் பெரியவர்கள் கொரோனா காவியாக இருக்க வேண்டாம். ஏனெனில் பெரியவர்கள்தான் கொரோனாவை வீட்டுக்கு கொண்டு வருகிறார்கள். ஏனென்றால் குழந்தைகளுக்கு கொரோனா வருவது கடினம். இப்போது குழந்தைகளிடையே கொரோனா வேகமாக பரவி வருகிறது. பெரியவர்கள் இரண்டு கொரோனா தடுப்பூசியை எடுத்துக்கொண்டாலும், நீங்கள் கொரோனாவை வீட்டுக்கு கொண்டு வரலாம். எனவே ஒரு வயது வந்தவராக, இந்த நாட்களில் உங்கள் குழந்தைகளைப் பாதுகாக்க நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

(அ)

# மட்டக்களப்பில் சமுர்த்தி வங்கியில் கடமையாற்றும் 15 பேருக்கு தொற்று

மட்டக்களப்பு, ஓக. 07

மட்டக்களப்பில் சமுர்த்தி வங்கியில் கடமையாற்றும் 15 பேர் உட்பட 35 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் காரியாலயத்தினுள்ளே இருக்கும் சமூர்த்தி வங்கியில் கடமையாற்றும் 15 பேர் மற்றும் புளியந்தீவு பகுதியிலும் அடையாளம் காணப்பட்டவர்களின் அடிப்படையில் 35 பேருக்கு வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக பிரதேச சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளில் கட்டில்கள் இல்லாத காரணத்தினால், தொற்று கண்டறியப்பட்டவர்களை அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஹிஷாலினி தீக்காயங்களுக்கு உள்ளான காட்சிகள் ரிஷாத் வீட்டிலுள்ள 16 கமராவிலும் பதிவாகவில்லை

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த 16 சி.சி. ரீ.வி. கமராக்கள் எவற்றிலும் ஹிஷாலினி தீக்காயங்களுக்கு உள்ளான காட்சிகள் எதுவும் பதிவாகியிருக்கவில்லை என பொலிஸ் தெரிவித்துள்ளது.

பொலிஸ் விசேட சி.சி.ரீ.வி. ஆய்வு பிரிவின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் குறித்த கமராக்களை பரிசோதித்திருந்த நிலையில், இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அவற்றில் இரண்டு கமராக்கள் செயலிழந்திருந்தன எனவும் கூறப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்குள் பொருத்தப்பட்டிருந்த இரண்டு கமராக்களே இவ்வாறு செயலிழந்து காணப்பட்டதுடன், அதற்கான காரணம் குறித்து தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# தோட்டப்புற சிறுவரை பணிகளிலிருந்து நிறுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை



கொழும்பு, ஓக. 07

சிறுவர்களின் பாதுகாப்பை கிராம மட்டத்தில் இருந்து பாதுகாக்க வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பணியாளர் சேவையில் ஈடுபட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில், அவர்களில் பெரும்பாலானோர் தோட்டப் புறங்களைச் சேர்ந்த சிறுவர்கள் என தெரியவந்துள்ளதாக ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இந்த நிலைமையை தடுப்பதற்கு கிராம அலுவலர் மட்டத்தில் இருந்து நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

இதன்படி, பணியாளர்களாக கடமைபுரியும் தோட்டப்புற சிறுவர்கள் தொடர்பாக தகவல்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில், அவற்றை உடனடியாக நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் சிறுவர்கள் மற்றும் பெண்களை பாதுகாப்பதற்காக அரச நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கும் ஜனாதிபதி இதன்போது பாராட்டு தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் சிறுவர்களின் அபிவிருத்திக்காக, வேறு நாடுகள் மேற்கொண்டுள்ள விடயங்களை ஆராய்ந்து, அவற்றை கிராம மற்றும் நகர்ப்புறங்களில் செயற்படுத்துவதற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதன்போது ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

மேலும் சிறுவர்களை முன்பள்ளிகள், பாடசாலைகள், மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்புவதன் முக்கியத்துவம் குறித்தும் ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தியுள்ளார்.

அத்துடன் பாடசாலைகளுக்கு செல்லமுடியாதுள்ள சிறுவர்கள் தொடர்பில் தகவல்களை பெற்று, அதற்கான காரணத்தைக் கண்டறிவதன் மூலம், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதான கடமையாகும் எனவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ள சிறுவர்களை அதில் இருந்து மீட்டெடுத்து, அவர்களுக்கு கல்வியை பெற்றுக் கொடுப்பதும் பிரதான பொறுப்பாகும் என ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்துள்ளார்.

அத்துடன், பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, வெளிநாடுகளில் வாழும் தாய்மார்களின் பிள்ளைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படவேண்டும் எனவும், துஷ்பிரயோகம் செய்யப்படலாம் என சந்தேகம் உள்ள குடும்பங்களில் சிறுவர்களை அடையாளம் காணவேண்டும் எனவும் ஜனாதிபதி கோட்டாபய மேலும் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு வைத்தியசாலையில் சகல வகை குருதிக்கும் தட்டுப்பாடு

## இரத்ததானம் செய்யுமாறு கோரிக்கை

மட்டக்களப்பு,ஜூலை7

**மட்டக்களப்பு போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் அனைத்து வகையான குருதிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் பூர்த்தியானவர் மற்றும் புதிதாக இரத்ததானம் செய்யக் கூடிய வர்கள் உங்களுக்கு அருகிலுள்ள இரத்த வங்கிக்கு சென்று இரத்த தானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

18 வயது பூர்த்தியானவர்கள், நிறை 50 கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும். கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டு ஒரு வாரத்தை நிறைவு செய்தவர்களும் இரத்ததானத்தை மேற்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 065 222 6116 என்ற தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்ளுமாறும் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலை கேட்டுக் கொண்டுள்ளது.

# மன்னார் மாவட்டத்தில் 2ஆம் கட்டமாக பைஸர் தடுப்பூசி செலுத்தும் பணிகள்

மன்னார், ஓக. 07

மன்னார் மாவட்டத்தில் 2 ஆவது கட்டமாக நேற்று வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் 'பைஸர்' கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோர பிரதேசங்களில் உள்ள அபாயம் கூடிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட்டு குறித்த கிராமங்களை சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கடந்த மாதம் 'பைஸர்' கொரோனா தடுப்பூசி வழங்கப் பட்டது.

இந்த நிலையில் விடுபட்டவர்களுக்கு குறித்த தடுப்பூசி செலுத்தும் பணி 2 ஆவது கட்டமாக நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை மற்றும் தாழ்வுபாடு ஆலய வளாகத்திலும் தடுப்பூசி செலுத்தும் பணி இடம்பெற்றது.

அதே போன்று நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் நேற்று வெள்ளிக்கிழமை காலை 2 ஆவது கட்டமாக முதலாவது கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.



மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில்,சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதார துறையினர் ஆகியோர் இணைந்து இராணுவம் மற்றும் விமானப் படையினரின் உதவியுடன் நேற்று தடுப்பூசி செலுத்தும் பணியை முன்னெ டுத்தனர்.

இதன்போது 30 வயதுக்கு மேற்பட்ட மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பைஸர் தடுப்பூசியை ஒதுக்கப்பட்ட நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# 177 பேருக்கு டெல்டா

கொழும்பு, ஓக. 07

நாட்டில் டெல்டா திரிபுடன் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 177ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களின் இரத்த மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியதைத் தொடர்ந்தே டெல்டா திரிபுடனான நோயாளர்களின் எண்ணிக்கை இவ்வாறு அதிகரித்துள்ளது.

# ஆசிரியர்களின் போராட்டத்துடன் மகாஜன ஆசிரியர்களும் இணைவு

யாழ்ப்பாணம், ஓக. 07

நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்திற்கு தற்போது யாழ்.மாவட்டத்திலிருந்தும் ஆதரவுக்குரல்கள் எழுந்து வருகின்றன.

புதியதாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர்களும் ஆதரவு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இது குறித்த அறிவிப்பை கல்லூரியின் ஆசிரியர் கழகம் வெளியிட்டுள்ளது.

கல்விச் செயல்பாடுகளிலிருந்து தற்காலிகமாக விலகுதல் என்று தெரிவித்து அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடளாவிய ரீதியில் நடைபெற்றுவரும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் முகமாக இன்று சனிக்கிழமை முதல் அனைத்து கல்விச் செயல்பாடுகளையும் தற்காலிகமாக இடைநிறுத்திக் கொள்வதற்கு நேற்று நடைபெற்ற ஆசிரியர் கழக நிர்வாக சபைக் கூட்டத்தில் முடிவு செய்துள்ளோம்.

எனவே சகல ஆசிரியர்களும் இன்று சனிக்கிழமை முதல் சகல கல்விச் செயற்பாடுகளிலிருந்தும் தற்காலிகமாக விலகி இருப்போம் என்றும் கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் பின்னர் அறியத் தரப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே, யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி, வட்டு. இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி என்பவற்றின் ஆசிரியர்களும் போராட்டத்துடன் கை கோத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மேலும் சிலர் கைது!

கொழும்பு, ஓக. 07

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது, மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை மீறிய ஆர்ப்பாட்டத்துக்கு ஆட்களை அழைத்துவந்து மூன்று வான் சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# யாழில் பட்டப்பகலில் நகை திருட்டு; வட்டுக்கோட்டையில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 07

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, வட்டு. மேற்கு - கண்ணகி அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள வீட்டில் இருந்து இரண்டரைப் பவுண் நகை திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கடந்த 4 ஆம் திகதி வீட்டின் உரிமையாளர் அவரது உறவினர் வீட்டுக்குச் சென்ற நிலையில் அவர்களின் வீட்டில் இருந்த இரண்டரைப் பவுண் நகை களவாடப்பட்டுள்ளது.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

சி.சி.ரி.வி காட்சிகளை அடிப்படையாக வைத்து சந்தேகத்தின் பேரில் ஒருவரை நேற்று பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த சந்தேக நபர் தானே நகைகளைத் திருடியதாகவும், அவற்றில் இரண்டு பவுண் நகையை நிதி நிறுவனத்தில் அடகு வைத்துள்ளதாகவும், மிகுதி நகை தன்னிடம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இவருடன் இணைந்து திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட இன்னொரு நபர் தலைமறைவாகியுள்ளார் எனவும், அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# வீதி அபிவிருத்தி திட்டங்கள் குறித்து ஆராய அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முடிவு

கொழும்பு, ஓக. 07

அரசாங்கத்தின் வீதி அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களை அழைத்து ஆராய்வதற்கு ஆளும் தரப்பு பிரதம கொறடாவும் நெடுஞ்சாலை அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முடிவு செய்துள்ளார்.

வீதி அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புள்ள பிரச்னைகள் குறித்து இதன்போது ஆராயப்படும்.

அதற்கமைய முதல் கட்டமாக, நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களை அழைத்து ஆராயப்பட உள்ளது.

கேகாலை, பதுளை, கொழும்பு மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் முதல் கட்டமாக அழைக்கப்படுவர். அடுத்து அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பிரச்னைகள் குறித்து ஆராயப்படும்.

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் 15 நிமிடங்கள் ஒதுக்கவும் அமைச்சர் ஒழுங்கு செய்துள்ளார்.

(அ)

# வவுனியாவில் டெல்டா தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்

வவுனியா, ஓக. 07

வவுனியாவிலும் டெல்டா வைரஸ் தொற்றுடன் கோவிட் தொற்றாளர் ஒருவர் இனங் காணப்பட்டுள்ளாரென சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் டெல்டா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் வவுனியாவிலும் டெல்ரா வைரஸ் தொற்றுக்குள்ளான கோவிட் நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று காலை வெளியாகின.

அதில், வவுனியா வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஆண் ஒருவருக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு சென்று வந்த நிலையில் காய்ச்சல் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் குறித்த நபர் சேர்க்கப்பட்டபோது அவரிடம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் முடிவுகள் வெளியாகிய நிலையில், அவருக்கு டெல்ரா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# எம்.பிக்கள் மூவருக்கு கொரோனா!

கொழும்பு, ஓக. 07

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனக திஸ்ஸ குட்டி ஆராச்சி, கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன திஸநாயக்கவுக்கும் கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுகயீனம் காரணமாக அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மாத்தளையில் உள்ள அவரது வீட்டில் அவர் தனிமைப்படுத்தலில் உள்ளாரென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெத ஆராச்சிக்கும் கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவர் தற்போது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளாரென தனது முகப் புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

(அ)

# ஒப்படைப்புக் கட்டளை (Vesting Order) விண்ணப்பம் தொடர்பான அறிவித்தல்

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

வழக்கு இல:–TR/52/2021
தன்மை :– நம்பிக்கைச் சொத்து
பெறுமதி :–
நடவடிக்கை முறை :– சுருக்க முறை

01.சோமலிங்ககுமார் விசாகன்,
இல.18/5, சீனியர் ஒழுங்கை,
கலட்டி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
மற்றும்
இல.6, வெவசட் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு – 06

2. ஸ்ரீநிவாசன் பிரதீபன்,
"ஸ்ரீமதி வாசா"
சுதுமலை மத்தி, சுதுமலை, மானிப்பாய்
மற்றும்
இல.67, 3/2,
சென். லோரன்ஸ் ரோட்,
வெள்ளவத்தை,
கொழும்பு – 06

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, காட்டுத் துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ் வரப்பிள்ளையார் ஆலய நம்பிக்கைப் பொறுப்பா ளர்கள்.

**மனுதாரர்கள்**

எதிர்

1. தர்மலிங்கம் யோகேஸ்வரன்,
இல. 759, கே கே எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

2.இராசதுரை தயாசிவம்,
இல. 467/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

3.இரட்ணசபாபதி இரட்னேஸ்வரன்,
இல. 28/1, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

4.பத்மநாதன் நிர்மலச்செல்வன்,
இல. 28/1, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

5.அரசகேசரி தவசொரூபன்,
இல. 471, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

6.சண்முகசுந்தரம் சிவகுமரன்,
இல. 29, ஓட்டுமடம் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

7.மகேந்திரன் ரவிசங்கர்
இல. 492, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**எதிர்மனுதாரர்கள்**

வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோவிலானது 1856ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு மூத்ததம்பி சோமநாதர் என்பவரால் கற்களாலும் ஓலைகளினாலும் அமைக்கப்பட்டது.

குறித்த ஆலயத்தினதும் ஆலயத்தின் தரும நம்பிக்கை ஆதனங்களையும் சேக்கிழார் மடத் தையும் மனுதாரர்களுடைய முன்னோர்களான காலஞ்சென்ற மூத்ததம்பி சோமநாதர், அவரிற்குப் பின்பு அவருடைய பரம்பரையினரும் நம்பிக்கை பொறுப்பாளர்களாக / தர்மகர்த்தாக்களாக/ அறங் காவலர்களாக இருந்து பராமரித்து பரிபாலனம் செய்தும் முகாமைத்துவம் செய்தும் வருகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற வழக்கு இல.25517 என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் படி கூட்டு நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்ட மூத்ததம்பி சோமநாதர் அவர்களின் பரம்பரையைச் சேர்ந்த சரவணமுத்து சோமலிங்கம் (1ம் மனுதாரருடைய பூட்டனார்) மற்றும் சீனி வாசகம் மனைவி பொன்னு (2ம் மனுதாரருடைய பூட்டி) ஆகியோரும் அவர்களுக்குப் பின்னர் இவ் வழக்கின் மனுதாரர்கள் வரையிலான அவர்களது பரம்பரையினர் நம்பிக்கை பொறுப்பாளர்களாக/ தர்மகர்த்தாக்களாக /அறங்காவலர்களாக இருந்து குறித்த ஆலயத்தினதும் இதன்கீழ் ஆதன அட்டவணைகளில் விபரிக்கப்பட்டுள்ள ஆலயத்தின் தரும நம்பிக்கை ஆதனங்களையும் சேக்கிழார் மடத்தையும் மற்றைய கூட்டு நம்பிக்கை பொறுப்பாளருடன் இணைந்து பராமரித்து பரிபாலனம் செய்து வந்துள்ளனர்.

இவ்வாலயத்தின் முறையான முகாமைத்துவம் தொடர்பாக முறையான எழுத்தாவணம் ஏதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பதால் நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமன உறுதிகள் இல. 1852, 589 மற்றும் 28 முறையே 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி, 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி, மற்றும் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28ஆம் திகதிகளில் நிறைவேற்றப்பட்டதுடன் முதலாம் மற்றும் இரண்டாம் மனுதாரர்கள் குறித்த ஆலயத்தின் நம்பிக்கை பொறுப்பாளர்களாக / தர்மகர்த்தாக்களாக / அறங்காவலர்களாக வெளிப்படுத்தப்பட்டது.

நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாகவும் அமைதியின்மையின் விளைவாகவும் இதன்கீழ் ஆதன அட்டவணைகளில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை வண்ணார்ப்பண்ணை, காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோவில் நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் கையேற்பதிலும் பரிபாலனம் செய்வதிலும் தடைகள் ஏற்பட்டிருந்ததோடு குறித்த இதன் கீழ் ஆதன அட்டவணைகளில் விபரிக்கப்பட்டுள்ள தருமச்சொத்து யாரிடம் உரிமை அறுதியுரப்பெற்றுள்ளன என்பது தொடர்பில் ஒரு தெளிவின்மை நிலவுகின்றது.

தற்போது 1ம் மற்றும் 2ம் மனுதாரர்கள் குறித்த வண்ணார்பண்ணை, காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோவிலில் நம்பிக்கைப்பொறுப்பாளர்களாகப் பணியாற்றி வருகின்றபோதும் மனுதாரர்களுக்கு நம்பிக்கைப்பொறுப்பாதனம் உறுதி மூலமோ அல்லது நீதிமன்ற கட்டளை மூலமோ வழங்கப்படாத காரணத்தால் இந்நம்பிக்கைச் சொத்து உடமைகள் எவரிடம் உள்ளது என்பது குறித்து நிலையற்ற தன்மை தோன்றியுள்ளது.

இதன்கீழ் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் தரும சொத்துக்களுக்கும் சேக்கிழார் மடத்திற்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரர்களின் பெயரில் ஓர் ஒப்படைப்புக் கட்டளை (Vesting Order) பெறும் நோக்கில் இந்நீதிமன்றத்தில் நம்பிக்கைச் சொத்து/52/2021 எனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு ஒப்படைப்பு கட்டளை பெறுவது தொடர்பில் (Vesting Order) பத்திரிகையில் விளம்பரப்படுத்துமாறு கௌரவ மன்று கட்டளையிட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் மேற்குறித்த மனுதாரர்களுக்கு குறித்த இதன்கீழ் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம், அதிலமைந்துள்ள சேக்கிழார் மடம் எனப்படும் தருமச் சொத்து என்பவை தொடர்பில் ஓர் ஒப்படைப்பு கட்டளை (Vesting Order) ஏன் வழங்கப்படக் கூடாதென ஆட்சேபனை ஏதுமிருப்பின் 2021ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி கௌரவ யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் முற்பகல் 9 மணிக்கு பிரசன்னமாகி உங்கள் தரப்பு ஆட்சேப னையினைத் தங்களது சட்டத்தரணி ஊடாக முன்வைக்குமாறு இத்தால் நீவிர் கோரப்படுகின்றீர்கள்.

**முதலாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகர சபை நிருவாக எல்லைக்குட்பட்ட பிரிவு வட்டாரம் இல 22, J/97 ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை வடமேற்கு "பொன்னிறப்பனிக்கனோடை வளவு" என்று அழைக்கப்படும் 2013 ஆம் ஆண்டு ஜ"லை மாதம் 22 ம் திகதி நிலஅளவையாளர் S.சுப்பிரமணியம் என்பவரால் விந்தாரிக்கப் பட்ட வரைபட இலக்கம் 2422 இல் நிலப்பரப்பின் விஸ்தீரணம் பதினொன்று இலாச்சம் மற்றும் ஏழு குளி (11 இலாச்சம் மற்றும் 7 குளி) இற்கு கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ என்பதுடன் அக்குறித்த நிலப்பரப்பில் அமைந்துள்ள வண்ணார்பண்ணைக் காட்டுத்தறை (காட்டுத்துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவான விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் என அறியப்படும் மற்றும் அழைக்கப்படும் ஆலயத்தில் கருவறை, மகாமண்டபம் வெளிப்புற மண்டபம், தரிசன மண்டபம், தம்ப மண்டபம், வசந்த மண்டபம், மடப்பள்ளி, வாகனசாலை மற்றும் துணை ஆலயங்களின் கட்டடங்கள், ஆலயத்தின் உட்புற, வெளிப்புற வீதி, கிணறுகள் மற்றும் வான்பயிர் செய்பயிர்கள் என்பவை உள்ளடங்களாக அனைத்தும் இதன் எல்லைகள் கிழக்கு ஒழுங்கை தற்போது ஓடை ஒழுங்கை என அழைக்கப்படும் வடக்கு சேக்கிழார் நாயனார் மடத்திற்குரிய ஆதனங்கள் மற்றும் சீதாவதி ஐயர் குமாரசுவாமி ஐயர் மற்றும் அருளம்பலம் மனைவி யோகம்மா ஆகியோரின் உரித்து வழி பின்னுரித்தாளர்களுக்குரிய ஆதனங்கள் மேற்கு ஆறுமுகம் தாமோதரப்பிள்ளை மற்றும் ஏனையோரின் உரித்து வழி பின்னுரித்தாளர்களுக்குரிய ஆதனங்கள் மற்றும் இத்துடன் இரண்டாம் ஆதன அட்டவணையில் முதலாவது விடயமாக விபரிக்கப்பட்ட காட்டுத்தறை (காட்டுத்துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவான விக்னேஸ்வர பிள்ளையார் ஆலய நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் தெற்கு பாதை (தற்போது ஓட்டுமடம் என அழைக்கப்படும்)

**இரண்டாம் ஆதன அட்டவணை**

1. வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகர சபை நிருவாக எல்லைக்குட்பட்ட பிரிவு வட்டாரம் இல 22 J/97 ஜயனார் கோவிலடி, வண்ணார்பண்ணைக் கோவிற் பற்று வண ்ணார்பண்ணை வடமேற்கு "பொன்னிறப்பனிக்கனோடை வளவு" என்று அழைக்கப்படும் நிலப் பரப்பின் விஸ்தீரணம் 24 இலாச்சம் இதில் வடக்கு கிழக்கு பக்கமாக அமைந்துள்ள வண்ணார் பண்ணைக் காட்டுத்தறை (காட்டுத்துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் (மேலே முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது) அமைந்துள்ள காணித்துண்டு நீக்கலாக மேற்கு மற்றும் தெற்கு பக்கமாக உள்ள மிகுதிக் காணி 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆம் திகதி நில அளவைளாளர் S.சுப்ரமணியம் என்ப வரால் விந்தாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 0827 இல் காணித்துண்டு 1 தொடக்கம் 10 என அடையாளமிடப்பட்டுள்ளது மேற்கூறப்பட்ட குறித்த வரைபட இல. 0827 இன்படி குறித்த காணித் துண்டுகளின் விஸ்தீரணம் 12 இலாச்சம் மற்றும் 11.33 குளி ஆகும். இக்காணியானது மேலும் நிலஅளவையாளர் S.சுப்பிரமணியம் என்பவரால் 2013 ஆம் ஆண்டு ஜ"லை மாதம் 22 ம் திகதியன்று விந்தாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 2422 இல் மேலும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது.
இதில் பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் ஒரு இலாச்சம் மற்றும் நான்கு தசம் ஒன்று எட்டு குளி (1 இலாச்சம் மற்றும் 4.18 குளி) (0.0317 ஹெக்டேயருக்கு சமனானது மற்றும் 317 சதுர மீற்றருக்கு சமனானது) கொண்ட குறித்த வரைபட இல 0827 இல் காணித்துண்டு 10 ஆக குறித்துரைக்கப்பட்டுள்ள காணித்துண்டுடன் தற்காலிகமாக அமைக் கப்பட்ட கட்டடங்கள் மற்றும் மற்றைய தோற்றங்கள் இதன் எல்லைகள் கிழக்கு ஓடை ஒழுங்கை வடக்கு இத்துடன் முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட குறித்த ஆலயத்திற்குரிய ஆத னங்கள் மேற்கு குறித்த வரைபட இல. 0827 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 9 தெற்கு ஓட்டுமடம் பாதை உள்ளடங்களாக குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கு நிற்பவை அனைத்தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

2. வண்ணார்பண்ணை வடக்கு மேற்கில் "பொன்னிறப்பனிக்கனோடை வளவு" என்று அழைக் கப்படும் பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் 24 இலாச்சம் இதில் வடக்கு கிழக்கு பக்கமாக அமைந்துள்ள வண்ணார்பண்ணை காட்டுத்தறை (காட்டுத் துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் (மேலே முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது) அமைந்துள்ள காணித்துண்டு நீக்க லாக மேற்கு மற்றும் தெற்கு பக்கமாக உள்ள மிகுதிக் காணி 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆம் திகதி நில அளவைளாளர் S.சுப்ரமணியம் என்பவரால் விந்தாரிக்கப்பட்ட வரைபட இல 0827 இல் 1 தொடக்கம் 10 என அடையாளமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வரைபட இல. 0827 இன்படி குறித்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 12 இலாச்சம் மற்றும் 11.33 குளி (0.3236 ஹெக்டேயர்ஸ் அல்லது 3246 சதுர மீற்றருக்கு சமனானது). இக்காணியானது மேலும் நிலஅளவையாளர் S.சுப்பிரமணியம் என்பவரால் 2013 ஆம் ஆண்டு ஜ"லை மாதம் 22 ம் திகதியன்று விந்தாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 2422 இல் மேலும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. இதில் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் பதினான்கு தசம் நான்கு நான்கு குளி (14.44 குளி) (0.0206 ஹெக்டேயருக்கு சமனானது மற்றும் 206 சதுர மீற்றருக்கு சமனானது) கொண்ட குறித்த வரைபட இல. 0827 இல் காணித்துண்டு 9 ஆக குறித்துரைக்கப்பட்டுள்ள காணித்துண்டு மற்றும் அதிலுள்ள மற்றைய தோற்றங்கள் இதன் எல்லைகள் கிழக்கு குறித்த வரைபட இல. 0827 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 10 இது மேலே 1ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளது. வடக்கு இத்துடன் முதலாம் ஆதன அட்ட வணையில் விபரிக்கப்பட்ட குறித்த ஆலயத்திற்குரிய ஆதனங்கள் மேற்கு குறித்த வரைபட இல 0827 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 8 மற்றும் தெற்கு ஓட்டுமடம் பாதை உள் ளடங்களாக குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கு நிற்பவை அனைத் தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

3. வண்ணார்பண்ணை வடக்கு மேற்கில் "பொன்னிறப்பனிக்கனோடை வளவு" என்று அழைக்கப்படும் பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் 24 இலாச்சம் இதில் வடக்கு கிழக்கு பக்கமாக அமைந்துள்ள வண்ணார்பண்ணை காட்டுத்தறை (காட்டுத்துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் (மேலே முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது) அமைந்துள்ள காணித்துண்டு நீக்கலாக மேற்கு மற்றும் தெற்கு பக்கமாக உள்ள மிகுதிக் காணி 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆம் திகதி நில அளவையாளர் S.சுப்ரமணியம் என்பவரால் விந்தாரிக்கப்பட்ட வரைபட இல 0827 இல் காணித்துண்டுகள் 1 தொடக்கம் 10 என அடையாளமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வரைபட இல 0827 இன்படி குறித்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 12 இலாச்சம் மற்றும் 11.33 குளி (0.3236 ஹெக்டேயர்க்கு அல்லது 3246 சதுர மீற்றருக்கு சமனானது). இக்காணியானது மேலும் நிலஅளவையாளர் S.சுப்பிரமணியம் என்பவரால் 2013 ஆம் ஆண்டு

ஜுலை மாதம் 22 ம் திகதியன்று விந்தாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 2422 இல் மேலும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது.

இதில் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் ஒரு இலாச்சம் மற்றும் ஆறு தசம் இரண்டு மூன்று குளி (1 இலாச்சம் மற்றும் 6.23 குளி) (0.0346 ஹெக்டேயருக்கு சமனானது மற்றும் 346 சதுர மீற்றருக்கு சமனானது) கொண்ட குறித்த வரைபட இல 0827 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காணித்துண்டு 8 அதனுடன் மேற்கு எல்லையில் கிணறின் ஒரு பங்கு மற்றும் அதிலுள்ள மற்றைய தோற்றங்கள் இதன் எல்லைகள் கிழக்கு மேலே 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த வரைபட இல. 0827 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 9 மற்றும் இதனுடன் முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த கோயிலுக்கு உரித்தான ஆதனம் வடக்கு குறித்த 0827 இலக்க வரைபடத்தில் உள்ள துண்டு 2 மற்றும் இதனுடன் முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த கோயிலுக்கு உரித்தான ஆதனம் மேற்கு குறித்த 0827 இலக்க வரைபடத்தில் உள்ள துண்டு 7 மற்றும் தெற்கு ஓட்டுமடம் வீதி உள்ளடங்களாக குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கு நிற்பவை அனைத்தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

4. வண்ணார்பண்ணை வடக்கு மேற்கில் "பொன்னிறப்பனிக்கனோடை வளவு" என்று அழைக்கப்படும் பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் 24 இலாச்சம் இதில் வடக்கு கிழக்கு பக்கமாக அமைந்துள்ள வண்ணார்பண்ணை காட்டுத்தறை (காட்டுத் துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் (மேலே முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது) அமைந்துள்ள காணித்துண்டு நீக்கலாக மேற்கு மற்றும் தெற்கு பக்கமாக உள்ள மிகுதிக் காணி 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆம் திகதி நில அளவைளாளர் S.சுப்ரமணியம் என்பவரால் விந்தாரிக்கப்பட்ட வரைபட இல. 0827 இல் காணித்துண்டுகள் 1 தொடக்கம் 10 என அடையாளமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வரைபட இல 0827 இன்படி குறித்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 12 இலாச்சம் மற்றும் 11.33 குளி (0.3236 ஹெக்டேயர்க்கு அல்லது 3246 சதுர மீற்றருக்கு சமனானது). இக்காணியானது மேலும் நில அளவையாளர் S.சுப்பிரமணியம் என்பவரால் 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22 ம் திகதியன்று விந்தாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 2422 இல் மேலும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது.

இதில் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் ஒரு இலாச்சம் மற்றும் தசம் பூச்சியம் மூன்று குளி (1 இலாச்சம் மற்றும் 0.03 குளி) (0.0257 ஹெக்டேயருக்கு சமனானது மற்றும் 257 சதுர மீற்றருக்கு சமனானது) கொண்ட குறித்த வரைபட இல. 0827 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காணித்துண்டு 7 அதனுடன் கிழக்கு எல்லையில் கிணறின் ஒரு பங்கு மற்றும் அதிலுள்ள மற்றைய தோற்றங்கள் இதன் எல்லைகள் கிழக்கு மேலே 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த வரைபட இல 0827 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 8 வடக்கு குறித்த 0827 இலக்க வரைபடத்தில் உள்ள துண்டுகள் 2 மற்றும் 3 மேற்கு குறித்த 0827 இலக்க வரைபடத்தில் உள்ள துண்டு 6 மற்றும் தெற்கு ஒட்டுமடம் வீதி உள்ளடங்களாக குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கு நிற்பவை அனைத்தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

5. வண்ணார்பண்ணை வடக்கு மேற்கில் "பொன்னிறப்பனிக்கனோடை வளவு" என்று அழைக்கப்படும் பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் 24 இலாச்சம் இதில் வடக்கு கிழக்கு பக்கமாக அமைந்துள்ள வண்ணார்பண்ணை காட்டுத்தறை (காட்டுத்துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் (மேலே முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது) அமைந்துள்ள காணித்துண்டு நீக்கலாக மேற்கு மற்றும் தெற்கு பக்கமாக உள்ள மிகுதிக் காணி 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆம் திகதி நில அளவைளாளர் S.சுப்ரமணியம் என்பவரால் விந்தாரிக்கப்பட்ட வரைபட இல. 0827 இல் காணித்துண்டுகள் 1 தொடக்கம் 10 என அடையாளமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வரைபட இல. 0827 இன்படி குறித்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 12 இலாச்சம் மற்றும் 11.33 குளி (0.3236 ஹெக்டேயர்க்கு அல்லது 3246 சதுர மீற்றருக்கு சமனானது). இக்காணியானது மேலும் நில அளவையாளர் S.சுப்பிரமணியம் என்பவரால் 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22 ம் திகதியன்று விந்தாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 2422 இல் மேலும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது.

இதில் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் பதினேழு தசம் நான்கு ஆறு குளி (17.46 குளி) (0.0249 ஹெக்டேயருக்கு சமனானது மற்றும் 249 சதுர மீற்றருக்கு சமனானது) கொண்ட குறித்த வரைபட இல. 0827 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காணித்துண்டு 6 மற்றும் அதிலுள்ள மற்றைய தோற்றங்கள் இதன் எல்லைகள் கிழக்கு மேலே 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த வரைபட இல. 0827 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 7 வடக்கு குறித்த 0827 இலக்க வரைபடத்தில் உள்ள துண்டு 3 மேற்கு குறித்த 0827 இலக்க வரைபடத்தில் உள்ள துண்டுகள் 4 மற்றும் 5 மற்றும் தெற்கு ஓட்டுமடம் வீதி. உள்ளடங்களாக குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கு நிற்பவை அனைத்தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

6. வண்ணார்பண்ணை வடக்கு மேற்கில் "பொன்னிறப்பனிக்கனோடை வளவு" என்று அழைக்கப்படும் பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் 24 இலாச்சம் இதில் வடக்கு கிழக்கு பக்கமாக அமைந்துள்ள வண்ணார்பண்ணை காட்டுத்தறை (காட்டுத்துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் (மேலே முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது) அமைந்துள்ள காணித்துண்டு நீக்கலாக மேற்கு மற்றும் தெற்கு பக்கமாக உள்ள மிகுதிக் காணி 2005 ஆம் ஆண்டு ஜப்பசி மாதம் 12ஆம் திகதி நில அளவைளாளர் S.சுப்ரமணியம் என்பவரால் விந்தாரிக்கப்பட்ட வரைபட இல 0827 இல் காணித்துண்டுகள் 1 தொடக்கம் 10 என அடையாளமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வரைபட இல 0827 இன்படி குறித்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 12 இலாச்சம் மற்றும் 11.33 குளி (0.3236 ஹெக்டேயர்க்கு அல்லது 3246 சதுர மீற்றருக்கு சமனானது). இக்காணியானது மேலும் நிலஅளவையாளர் S.சுப்பிரமணியம் என்பவரால் 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22ம் திகதியன்று விந்தாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 2422 இல் மேலும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது.

இதில் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் ஒரு இலாச்சம் மற்றும் ஒன்று தசம் ஒன்று ஏழு குளி (1 இலாச்சம் மற்றும் 1.17 குளி) (0.0274ஹெக்டேயருக்கு சமனானது மற்றும் 274 சதுர மீற்றருக்கு சமனானது) கொண்ட குறித்த வரைபட இல. 0827 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காணித்துண்டு 5 மற்றும் அதிலுள்ள மற்றைய தோற்றங்கள் இதன் எல்லைகள் கிழக்கு மேலே 5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த வரைபட இல 0827 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 6 வடக்கு குறித்த 0827 இலக்க வரைபடத்தில் உள்ள துண்டு 4 மேற்கு குறித்த 0827 இலக்க வரைபடத்தில் உள்ள துண்டு 4ற்கு செல்லும் மற்றும் சேர்ந்த ஒழுங்கை மற்றும் தெற்கு ஓட்டுமடம் வீதி உள்ளடங்களாக குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கு நிற்பவை அனைத்தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

7. வண்ணார்பண்ணை வடக்கு மேற்கில் "பொன்னிறப்பனிக்கனோடை வளவு" என்று அழைக்கப்படும் பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் 24 இலாச்சம் இதில் வடக்கு கிழக்கு பக்கமாக அமைந்துள்ள வண்ணார்பண்ணை காட்டுத்தறை (காட்டுத்துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் (மேலே முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது) அமைந்துள்ள காணித்துண்டு நீக்கலாக மேற்கு மற்றும் தெற்கு பக்கமாக உள்ள மிகுதிக் காணி 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆம் திகதி நில அளவையாளர் S.சுப்ரமணியம் என்பவரால் விந்தாரிக்கப்பட்ட வரைபட இல. 0827 இல் காணித்துண்டுகள் 1 தொடக்கம் 10 என அடையாளமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வரைபட இல. 0827 இன்படி குறித்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 12 இலாச்சம் மற்றும் 11.33 குளி (0.3236 ஹெக்டேயர்க்கு அல்லது 3246 சதுர மீற்றருக்கு சமனானது). இக்காணியானது மேலும் நிலஅளவையாளர் S.சுப்பிரமணியம் என்பவரால் 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22ம் திகதியன்று விந்தாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 2422 இல் மேலும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது.

இதில் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் ஒரு இலாச்சம் மற்றும் ஐந்து தசம் ஆறு ஒன்று குளி (1இலாச்சம் வரகு காணி மற்றும் 5.61குளி) (0.0337ஹெக்டேயருக்கு சமனானது மற்றும் 337 சதுர மீற்றருக்கு சமனானது) கொண்ட குறித்த வரைபட இல. 0827 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காணித்துண்டு 4 மற்றும் அதிலுள்ள மற்றைய தோற்றங்கள் இதன் எல்லைகள் கிழக்கு மேலே 5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த வரைபட இல. 0827 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 6 வடக்கு குறித்த 0827 இலக்க வரைபடத்தில் உள்ள துண்டு 3 மேற்கு சுப்ரமணியம் புவனேஸ்வரி, சுப்ரமணியம் யோகம்மாவிற்குரித்தான ஆதனங்கள் மற்றும் தெற்கு குறித்த 0827 இலக்க வரைபடத்தில் உள்ள துண்டு 5 மற்றும் ஓட்டுமடம் வீதி உள்ளடங்களாக குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கு நிற்பவை அனைத்தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

8. வண்ணார்பண்ணை வடக்கு மேற்கில் "பொன்னிறப்பனிக்கனோடை வளவு" என்று அழைக்கப்படும் பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் 24 இலாச்சம் இதில் வடக்கு கிழக்கு பக்கமாக அமைந்துள்ள வண்ணார்பண்ணை காட்டுத்தறை (காட்டுத்துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் (மேலே முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது) அமைந்துள்ள காணித்துண்டு நீக்கலாக மேற்கு மற்றும் தெற்கு பக்கமாக உள்ள மிகுதிக் காணி 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12ஆம் திகதி நில அளவையாளர் S. சுப்ரமணியம் என்பவரால் விந்தாரிக்கப்பட்ட வரைபட இல. 0827இல் காணித்துண்டுகள் 1 தொடக்கம் 10 என அடையாளமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வரைபட இல 0827 இன்படி குறித்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 12 இலாச்சம் மற்றும் 11.33 குளி (0.3236 ஹெக்டேயர்க்கு அல்லது 3246 சதுர மீற்றருக்கு சமனானது). இக்காணியானது மேலும் நிலஅளவையாளர் S.சுப்பிரமணியம் என்பவரால் 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22ம் திகதியன்று விந்தாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 2422 இல் மேலும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது

இதில் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் மூன்று இலாச்சம் மற்றும் ஏழு தசம் பூச்சியம் ஏழு குளி (3 இலாச்சம் வரகு காணி மற்றும் 7.07 குளி) (0.0872 ஹெக்டேயருக்கு சமனானது மற்றும் 872 சதுர மீற்றருக்கு சமனானது) கொண்ட குறித்த வரைபட இல 0827 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3 மற்றும் அதிலுள்ள கிணறு, மற்றைய தோற்றங்கள் இதன் எல்லைகள் கிழக்கு குறித்த வரைபட இல. 0827 இல் குறிப்பிடப்பட்டள்ள காணித்துண்டுகள் 1 மற்றும் 2 மற்றும் இத்துடன் முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கோயிலுக்கு உரித்தான ஆதனம் வடக்கு பொன்னுதுரைக்கு உரித்தான ஆதனம் மேற்கு சுப்ரமணியம் புவனேஸ்வரி மற்றும் சுப்ரமணியம் யோகம்மாவிற்குரித்தான ஆதனங்கள் மற்றும் தெற்கு குறித்த வரைபடத்தில் உள்ள துண்டுகள் 4 மற்றும் 6 உள்ளடங்களாக குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கு நிற்பவை அனைத்தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

9. வண்ணார்பண்ணை வடக்கு மேற்கில் "பொன்னிறப்பனிக்கனோடை வளவு" என்று அழைக்கப்படும் பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் 24 இலாச்சம் இதில் வடக்கு கிழக்கு பக்கமாக அமைந்துள்ள வண்ணார்பண்ணை காட்டுத்தறை (காட்டுத்துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் (மேலே முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது) அமைந்துள்ள காணித்துண்டு நீக்கலாக மேற்கு மற்றும் தெற்கு பக்கமாக உள்ள மிகுதிக் காணி 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆம் திகதி நில அளவைளாளர் S.சுப்ரமணியம் என்பவரால் விந்தாரிக்கப்பட்ட வரைபட இல. 0827 இல் காணித்துண்டுகள் 1 தொடக்கம் 10 என அடையாளமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வரைபட இல 0827 இன்படி குறித்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 12 இலாச்சம் மற்றும் 11.33 குளி (0.3236 ஹெக்டேயர்க்கு அல்லது 3246 சதுர மீட்டருக்கு சமனானது). இக்காணியானது மேலும் நிலஅளவையாளர் S.சுப்பிரமணியம் என்பவரால் 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22 ம் திகதியன்று விந்தாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 2422 இல் மேலும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது

இதில் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் பதினைந்து தசம் ஒன்பது ஐந்து குளி (15.95 குளி) (0.0228ஹெக்டேயருக்கு சமனானது மற்றும் 228 சதுர மீட்டருக்கு சமனானது) கொண்ட குறித்த வரைபட இல. 0827 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 மற்றும் அதனுடன் அதிலுள்ள கிணறு மற்றும் அதிலுள்ள மற்றைய தோற்றங்கள் இதன் எல்லைகள் கிழக்கு முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நம்பிக்கை சொத்துக்கு உரித்தான ஆதனம் வடக்கு கீழே 10ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த வரைபட இல. 0827 இல் குறிப்பிடப்பட்டள்ள காணித்துண்டு 1 மேற்கு குறித்த வரைபட இல 0827 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 3 மற்றும் தெற்கு குறித்த வரைபடத்தில் உள்ள துண்டுகள் 7 மற்றும் 8 உள்ளடங்களாக குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கு நிற்பவை அனைத்தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

10. வண்ணார்பண்ணை வடக்கு மேற்கில் "பொன்னிறப்பனிக்கனோடை வளவு" என்று அழைக்கப்படும் பிரிக்கப்பட்டு மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் 24 இலாச்சம் இதில் வடக்கு கிழக்கு பக்கமாக அமைந்துள்ள வண்ணார்பண்ணை காட்டுத்தறை (காட்டுத்துறை எனவும் அழைக்கப்படும்) அம்பலவாண விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் (மேலே முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது) அமைந்துள்ள காணித்துண்டு நீக்கலாக மேற்கு மற்றும் தெற்கு பக்கமாக உள்ள மிகுதிக் காணி 2005 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆம் திகதி நில அளவையாளர் S.சுப்ரமணியம் என்பவரால் விந்தாரிக்கப்பட்ட வரைபட இல 0827 இல் காணித்துண்டுகள் 1 தொடக்கம் 10 என அடையாளமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட வரைபட இல 0827 இன்படி குறித்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 12 இலாச்சம் மற்றும் 11.33 குளி (0.3236 ஹெக்டேயர்க்கு அல்லது 3246 சதுர மீற்றருக்கு சமனானது). இக்காணியானது மேலும் நிலஅளவையாளர் S.சுப்பிரமணியம் என்பவரால் 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22ம் திகதியன்று விந்தாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 2422 இல் மேலும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது.

இதில் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின் விஸ்தீரணம் பதினொன்று தசம் ஒன்று ஒன்பது குளி (11.19 குளி) (0.0160ஹெக்டேயருக்கு சமனானது மற்றும் 160சதுர மீட்டருக்கு சமனானது) கொண்ட குறித்த வரைபட இல 0827 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 மற்றும் அதிலுள்ள மற்றைய தோற்றங்கள் இதன் எல்லைகள் கிழக்கு முதலாம் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நம்பிக்கை சொத்துக்கு உரித்தான ஆதனம் வடக்கு மேலே 8 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த வரைபட இல 0827 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டு 3 மேற்கு குறித்த வரைபட இல 0827 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 3 மற்றும் தெற்கு குறித்த வரைபடத்தில் உள்ள துண்டு 2 உள்ளடங்களாக குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கு நிற்பவை அனைத்தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

### மூன்றாம் ஆதன அட்டவணை

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்ட யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட வண்ணார்பண்ணை J/80 பெரிய கடைப்பிரிவு வட்டாரம் 18இல் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கில் அமைந்துள்ள பிரிவிடப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணி மற்றும் வளாகம் மற்றும் அதில் அமைந்துள்ள காங்கேசன்துறை வீதி வரிமதிப்பிட்ட இல.458 இனை கொண்ட வீடு மற்றும் ஏனைய கட்டடங்கள் இந்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் மூன்று இலாச்சம் (3 இலாச்சம்) அதற்கு கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ மற்றும் அதில் அமைந்துள்ள கிணறு இதன் எல்லைகள் கிழக்கு எஞ்சிய பகுதி வடக்கு கனகசுந்தரம் முருகமூர்த்தி பெண் பவானிக்குரிய

(மிகுதி 10ஆம் பக்கத்தில்)

ஆதனம் மேற்கு காங்கேசன்துறை (K.K.S.) வீதி தெற்கு காங்கேசன்துறை (K.K.S.) வீதி மற்றும் கஸ்தூரியார் வீதியின் இணைப்பு ஒழுங்கை வரிமதிப்பிட்ட இல. 456இனை கொண்ட வளாகம் உள்ளடங்களாக குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கும் நிற்பவை அனைத்தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

**நான்காம் ஆதன அட்டவணை**

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்ட யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாக எல்லைக்குட்பட்ட வண்ணார்பண்ணை J/97 ஜயனார் கோவிலடிப்பிரிவு வட்டாரம் 22 வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கில் அமைந்துள்ள "அலடி" (Alady), இரட்டைக்கேணி (Iraddaikkerny) "பனிக்கன்தரை" (Pannikkantharai) அல்லது, கொத்தன்வளவு (Koththanvalavu) மற்றும் "வேதியன் வளவு" (Vediyan valavu) என அழைக்கப்படும் பிரிவிடப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணி மற்றும் வளாகம் மற்றும் அதனுடன் வீடுகள், தற்காலிக கட்டடங்கள், கிணறுகள் மற்றும் பயிர்செய்கைகள், இயற்கையாக தோன்றிய தாவரங்கள் மற்றும் ஏனைய தோற்றங்களை கொண்ட நிலப்பரப்பின் விஸ்தீரணமானது நில அளவையாளர் N.தேவராஜன் அவர்களால் விந்தாரிக்கப்பட்ட 1970ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதிய வரைபட இல. 1 இன் படி பதினைந்து இலாச்சம் மற்றும் பதினொரு குளி (15 இலாச்சம் மற்றும் 11 குளி) ஆகும் என்பதுடன் குறித்த வரைப்படத்தில் காணித்துண்டுகள் 1, 2, 3 மற்றும் 4 என குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் குறித்த 15 இலாச்சம் மற்றும் 11 குளி விஸ்தீரணத்தைக் கொண்ட காணியின் எல்லைகள் கிழக்கு குறுக்குப்பாதை மற்றும் நடைபாதை வடக்கு ஜயனார் கோவில் வீதி, மேற்கு மானிப்பாய் வீதி மற்றும் தெற்கு வேலுப்பிள்ளை ராஜா மற்றும் ஏனையோர்களுக்கு சொந்தமான ஆதனம். குறித்த எல்லைகளுக்குள் காணப்படுகின்ற அனைத்தும் அங்கு நிற்பவை அனைத்தும் மற்றும் அங்கு காணப்படுகின்ற மற்ற தோற்றங்கள் முழுவதும்.

**ஐந்தாம் ஆதன அட்டவணை**

வட மாகாண யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகர சபை நிருவாக எல்லைக்குட்பட்ட, நல்லூர் பிரதேச செயலக பிரிவு, J/97 ஜயனார் கோவிலடி கிராம சேவை பிரிவிற்குட்பட்ட வண்ணார் பண்ணை வட மேற்கில் அமைந்துள்ள "பொன்னிறப்பனிக்கனோடை"என அழைக்கப்படும் காணியின் விஸ்தீரணம் 2 இலாச்சம் மற்றும் சேக்கிழார் மடம் மற்றும் முன் மண்டபம் உட்பட அதனோடு இணைந்துள்ள மற்றய கட்டடங்கள் உள்ளடங்களாக இதன் எல்லைகள் வடக்கு எல்லை அஸ்வினி சிவநாதனுக்குரிய ஆதனம் கிழக்கு ஓடை ஒழுங்கை மேற்கு குமாரசாமி ஐயருக்குரிய ஆதனம் மற்றும் தெற்கு குறித்த ஆலயத்திற்குரிய மீதமுள்ள ஆதனங்கள் அனைத்தும் உள்ளடங்களாக.

நீதிமன்ற உத்தரவுப்படி
2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி

வரைபு
**துளசி தர்மகுலசிங்கம்**
**மனுதாரர்களின் சட்டத்தரணி**

**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை
விடைத்தாள் - II

கல்வி tv CHANNEL

**06. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1) பத்து ஆண்டுகளை .................................. என்று கூறுவர். (சதாப்தம்/ தசாப்தம்)
2) பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர் ...................... ஆவார். (ஓட்டுநர்/நடத்துநர்)

**07. கீழே தரப்பட்டுள்ள திருக்குறளில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.**

எந்நன்றி கொன்றார்க்கு ................................
.................................. கொன்ற மகற்கு

**08.** கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் **நிறுத்தக்குறிகளை** இடுக.

கை வா போ இவை தனித்தனியே பொருள் தருகின்றன

**09.** கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

எட்டுத் திக்கும் அலறிட
இடியைப் போல வெடித்திடும்
குட்டித் தம்பி நடுங்குவான்
காட்சி கண்டு மகிழுவேன்

1) இப்பாடலின் மூலம் விபரிக்கப்படும் காட்சி எது?
..........................................................................
2) பாடலடிகளில் இடம்பெற்றுள்ள உவமானத்தை தெரிந்தெடுத்து எழுதுக?
..........................................................................

**10.** கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

மயில் **போத்து** போல **குதிரை** ..........................................

**11.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1) பள்ளிவாசல் :- ..........................................
2) இடியப்பம் :- ..........................................

**12. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கில வாக்கியத்திலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைப் பெட்டியில் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.**

1) We ...................... students.
2) Please give me .................... eraser.

| | | |
|---|---|---|
| is | are | an |
| | a | |

**13. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லும் விதத்தில் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

தயவு செய்து சத்தம் போட வேண்டாம் :- ..........................................

**14. பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

வ(ட்)ட கொளு :- ..........................................


**15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.**

பஸ் வண்டி வந்து விட்டது :- ..........................................

16. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.


சட்டை : துணி எனின் வளையல் : ..........................

1) காப்பு 2) தங்கம் 3) கை

17.



சமீர் குறித்த சக்கர விளையாட்டின் போது அம்புக்குறி காட்டும் இடத்தில் ஆரம்பித்து முதலில் E என்ற சக்கரத்தில் தனது இடது காலை ஊன்றி வலஞ்சுழியாக வலது, இடது, வலது எனத் தொடர்ச்சியாக தனது கால்களை மாற்றி மாற்றி முன்னோக்கிப்பாய்த் தொடங்கினான். இவ்வாறு மூன்று சுற்றுக்கள் பாய்ந்தபின் அவன் இடது காலை இரு தடவைகள் ஊன்றிய இரண்டாவது ஆங்கில எழுத்து எது?

1) E 2) F 3) G

18.


பதினாறு சமபக்க முக்கோணிகளால் அமைக்கப்பட்ட இவ்வுருவின் நிழற்றிய முக்கோணங்களின் சுற்றளவு 54cm ஆகும். இங்கு முழு உருவின் சுற்றளவு எத்தனை சென்ரிமீற்றர்?

1) 48cm 2) 144cm 3) 36cm

19. 31 நாட்கள் கொண்ட ஒரு மாதத்தின் முதல்நாள் திங்கட்கிழமையாகும். குறித்த ஒரு நாளில் உள்ள திகதிகளின் கூட்டுத்தொகை 85 எனில் அது என்ன நாளாகும்?


1) திங்கட்கிழமை 2) செவ்வாய்க்கிழமை 3) புதன்கிழமை

20. ஜாக்சன் ரூ375.00 பணத்தினைச் செலுத்தி ஒரு பந்து ரூ 45.00 வீதமும் ஒரு புல்லாங்குழல் ரூ30.00 வீதமும் குறித்த எண்ணிக்கையில் வாங்கினான் அவன் வாங்கியிருக்கக்கூடிய புல்லாங்குழல்கள், பந்துகளின் எண்ணிக்கை முறையே

1) 5,4 2) 4,5 3) 5,5

21. குறித்த நேரத்தில் பொலனறுவையில் இருந்து புறப்பட்ட புகையிரதம் மாறாத கதியில் மணிக்கு 60km வேகத்தில் புத்தளத்தை அடைவதற்கு 2 மணித்தியாலங்கள் எடுத்தது. அதேவேளை அதே தூரத்தினை அதே இடத்திலிருந்து புறப்பட்ட பேருந்து மணிக்கு 40km வேகத்தில் சென்றடைந்தது எனின் பேருந்து புத்தளத்தை அடைய எடுத்த மணித்தியாலங்கள் எத்தனை?

1) 6 மணித்தியாலங்கள் 2) 3 மணித்தியாலங்கள் 3) 4 மணித்தியாலங்கள்

22.



இவ்வுருக்களில் அறுபக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் மூன்று நிலைகள் உள்ளன. மேற்குறித்த தாயக்கட்டையில் 4 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிரே உள்ள இலக்கம் எது?

1) 3 2) 6 3) 2

# நுவரெலியாவில் 178 பேர் மரணம்



நுவரெலியா, ஓக. 07

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரையில் 8 ஆயிரத்து 631 பேர் கொரோனா வைரஸ் தொற் றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும், அவர்களில் 178 பேர் உயிரிழந் துள்ளனர் என்றும் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் 5 ஆயி ரத்து 428 குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன என்றும் சுகாதாரப் பிரிவு குறிப்பிட் டுள்ளது. இங்கு நேற்றுமுன்தினம் மாத் திரம் 31 பேர் தொற்றாளர்க ளாக அடையாளம் காணப்பட் டுள்ளதுடன் 52 குடும்பங்கள் தனி மைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுகாதாரப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ)

# புதுக்குடியிருப்பில் வீடு தீயில் எரிந்து நாசம்!

## இளம் குடும்பம் நிர்க்கதி

முல்லைத்தீவு, ஓக. 07

புதுக்குடியிருப்பு - கைவேலியில் தற்காலிக வீடு ஒன்று தீயில் எரிந்து நாசமானது.

இந்தத் தீ அனர்த்தம் நேற்று ஏற்பட்டுள்ளது.

கூலி வேலைக்கு சென்று கிடைக்கும் வருமானத்தில் தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வந்த இளம் குடும்பம் வசித்து வந்த தற்காலிக வீடே தீயில் எரிந்து நாசமானது. இதனால் அந்தக் குடும்பத்தின் நிலை நிர்க்கதியாகியுள்ளது.

குழந்தை ஒன்றுடன் வாழும் இளம் குடும்பத்தின் ஆதாரமாக இருந்த தற்காலிக வீடு மற்றும் அதனுள் இருந்த பொருட்கள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஜோசப் ஸ்டாலினுக்கு ஏதேனும் நடந்தால் அரசே முழுப்பொறுப்பு

## பாராளுமன்றில் கூட்டமைப்பு தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.07**

**"ஆசிரியர் சமூகத்தின் போராட்டம் நியாயமானது. அதற்கு அரசு நியாயமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயாளர் ஜோசப் ஸ்டாலினை இந்த அரசு துரத்திக்கொண்டு திரிகின்றது. அவருக்கு ஏதேனும் ஒன்று நடந்தால் அதற்கு அரசே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்."**



- இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சபையில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"இந்த நெருக்கடியைக் கையாள சுபோதினி ஆணைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு ஊடாக ஆசிரியர் சம்பளப் பிரச்னைகளைத் தீர்க்கும் முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன. ஆணைக்குழுவின் அறிக்கையையும் கல்வி அமைச்சே உருவாக்கியிருந்தது.

ஆகவே, சுபோதினி ஆணைக் குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றே ஆசிரியர் சங்கங்கள் கேட்கின்றன.

இந்த நாட்டின் முன்பள்ளி ஆசிரியர்களை சிவில் பாதுகாப்புப் பிரிவின் கீழ் வைத்துள்ளனர். இராணுவத்தின் கீழ் முன்பள்ளிகளை வைத்துள்ள மிக விசித்திரமான நாடு இலங்கையே. இதுதான் ஆசியாவின் ஆச்சரியம்" - என்றார். (இ)

# முள்ளியவளையில் விபத்தை ஏற்படுத்திய கார் சாரதி கைது

முல்லைத்தீவு, ஓக. 07

முல்லைத்தீவு மாவட்டம், முள்ளியவளை நகர் பகுதியில் விபத்தை ஏற்படுத்திய காரின் சாரதி முள்ளியவளை வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காரின் சாரதி கார் கதவைத் திறக்க முற்பட்டபோது, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காரின் கதவில் மோதுண்டு நோயாளர் காவுவண்டியில் மோதி விபத்துக்குள்ளானார்கள்.

இதன்போது காயமடைந்த இருவரும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

விபத்தை அடுத்து நோயாளர் காவுவண்டியின் சாரதியும், விபத்துக்குக் காரணமாக இருந்த சொகுசு காரின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# கொழும்பில் தொற்றாளரில் 90 வீதமானோருக்கு 'டெல்டா'

கொழும்பு, ஓக. 07

நாட்டில் சமூகத்தினுள் டெல்டா திரிபு வைரஸ் எந்தளவு வேகத்தில் பரவி வருகின்றது என்பது தொடர்பில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர ருவிட்டர் பதிவொன்றின் ஊடாகத் தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதத்தில் டெல்டா பரவல் தொடர்பான புள்ளி விரத்தைக் காட்டும் வரைபை தனது ருவிட்டர் பதிவில் இணைத்துள்ள கலாநிதி சந்திம ஜீவந்தர, தற்போது கொழும்பு நகரத்தினுள் டெல்டா திரிபு வைரஸ் அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பரவி வருகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

ஜூலை முதல் வாரத்தில் கொழும்பில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களில் 75 சதவீதத்துக்கும் அதிகமானோரின் மாதிரிகளில் அல்பா திரிபு கண்டறியப்பட்டிருந்ததுடன், 19.3 சதவீதமானோரிடையே டெல்டா திரிபு கண்டறிப்பட்டது.

எனினும், ஜூலை 31 ஆம் திகதியாகும்போது, இந்த நிலைமை தலைகீழாக மாற்றமடைந்துள்ளதை ருவிட்டர் பதிவின் ஊடாக அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் கொரோனாத் தொற்று நிலைமை மற்றும் பரவல் தொடர்பில் நம்பத்தகுந்த தகவல்களை வெளியிடும் ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளரின் வெளிப்படுத்தலுக்கமைய, ஜூலை 31 ஆம் திகதிய நிலைமையின்படி, கொழும்பில் கொரோனாத் தொற்று உறுதியான 90 சதவீதத்துக்கு அதிகமானோரின் மாதிரிகளில் டெல்டா திரிபு கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயமானது மிகுந்த அவதானம் செலுத்த வேண்டியதொரு பாரதூரமான நிலைமையாகும் என்றும் கலாநிதி சந்திம ஜீவந்தர சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

### பாராளுமன்ற சிறப்புரிமைக்குள் ஒளிந்துகொண்டு

# உண்மையை மூடிமறைக்க முயற்சிக்கவே வேண்டாம்!

## ரிஷாத்துக்கு ஜோன்ஸ்டன் பதில்

கொழும்பு, ஓக. 07

"அப்பாவி சிறுமிக்கு அநியாயம் நேர்ந்துள்ளது. இந்த விடயத்தில் சட்டத்தைச் சரியாகக் கையாண்டு குற்றவாளியைத் தண்டிப்போம். இதில் ரிஷாத் பதியுதீன் எதனையும் கூற வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல் நீதிமன்ற விசாரணைகளை, மரண பரிசோதனைகளை பாராளுமன்ற சிறப்புரிமைக்குள் ஒளிந்து கொண்டு மூடி மறைக்க முயற்சிக்க வேண்டாம்."



- இவ்வாறு ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ரிஷாத் பதியுதீன் எம்.பி. நேற்றுமுன்தினம் உரையாற்றி ஹிஷாலினி விடயத்தில் நடந்தது என்னவென தனது பக்க கருத்துக்களை முன்வைத்த வேளையில், அதற்குப் பதிலளித்துப் பேசும்போதே அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"ரிஷாத் பதியுதீனின் உரையை முழுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி தற்போது நடக்கும் விசாரணைகளைப் பற்றி பேசுகின்றார். ஆனால், நீதிமன்றத்தில் முன்னெடுக்கும் வழக்கு விடயங்களுக்கு நாம் இடமளிக்க வேண்டும்.

எனவே, அவர் நீதிமன்ற விடயங்கள் குறித்துப் பேசிய காரணிகளை ஹன்சார்டில் இருந்து நீக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றேன். அதுமட்டுமல்ல, ஜனாதிபதியோ, அரசோ அவரை தனிப்பட்ட முறையில் பழிவாங்க நினைக்கவில்லை.

சிறுமியின் மரணத்தின் பின்னர் எழுந்த சர்ச்சைகளில் அரசு சரியாக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற பிரச்னையே எழுந்தது. எனவே, எந்தவோர் அரசியல்வாதியையும் பழிவாங்க அரசு நினைக்கவில்லை" - என்றார். (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 123 பேர் கைது!

கொழும்பு, ஓக. 07

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 123 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனைப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 53 ஆயிரத்து 266 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

# வவுனியாவில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 11 பேர் உட்பட 46 பேருக்கு தொற்று உறுதி

வவுனியா, ஓக. 07

வவுனியாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 உட்பட 46 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

அதில், விநாயகபுரம் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேருக்கும், நேரியகுளம் பகுதியில் 10 பேருக்கும், தோணிக்கல் பகுதியில் இருவருக்கும், உளுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், மதீனாநகர் பகுதியில் ஒருவருக்கும், நெடுங்கேணிப் பகுதியில் ஒருவருக்கும், பெரிய உளுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், பாரதிபுரம் பகுதியில் மூவருக்கும், காத்தார்சின்னக்குளம் பகுதியில் மூவருக்கும், சிறிராமபுரம் பகுதியில் 05 பேருக்கும், வவுனியா சிறைச்சாலை கைதிகள் 03 பேருக்கும், ஓலுமடு பகுதியில் ஒருவருக்கும், பத்தினியார் மகிழம்குளம் பகுதியில் ஒருவருக்கும், மகாஇறம்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், பம்பைமடுப் பகுதியில் ஒருவருக்கும், தட்டாங்குளம் பகுதியில் ஒருவருக்கும் என 46 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

இதில் கடந்த மூன்று நாட்களில் நேரியகுளம் பகுதியில் 64 பேர் தொற்றாளர்களாக இனங் காணப்பட்டுள்ளனர். (இ)



# கலிபோர்னியா காட்டு தீ: நகரங்களும் எரிந்து நாசம்!

கலிபோர்னியா, ஓக. 07

வட கலிபோர்னியாவில் கடந்த மூன்று வார காலமாக காட்டுத் தீ பரவி வருகின்றது.

இந்த நிலையில், வட கலி போர்னியாவின் மலைப்பகுதி யில் அமைந்துள்ள சிறிய நகரத்தில் காட்டுத் தீ தொடர்ந்து பரவிவருகிறது. இதனால், பழமைவாய்ந்த கட்டடங்கள் உட்பட நகரின் பெரும்பா லான பகுதிகள் தீக்கிரையா கின.

அபாயமான வானிலை நிலவிவரும் நிலையில், புதிதாக உருவான காட்டுத் தீ வியாழக் கிழமை அன்று, பல வீடுகளை தீக்கிரையாக்கின. இதனிடையே, தீயை கட்டுக்குள் கொண்டு வர தீயணைப்பு வீரர்கள் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த காட்டுத் தீ, 64 கி. மீ. வேகத்தில், விவசாயம் செய்யப் படும் வறட்சியான பகுதிக ளுக்கு விரிவடைந்து கிரீன்வில் பகுதியில் உள்ள வடக்கு சியரா நிவாடாவில் கட்டுக்கடங்கா மல் பரவிவருகிறது.

நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த கட்டடங்கள், எரிவாயு நிலையம், விடுதி, மதுபான கடைகள் ஆகியவை தீக்கிரை யாகின.



# பாகிஸ்தானில் இந்து ஆலயம் இஸ்லாமிய கும்பலால் சூறை!

இஸ்லாமாபாத், ஓக. 07

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் இந்து ஆலயம் ஒன்று சூறையாடப்பட்டது டன், அங்குள்ள சிலைகளையும் உடைத்து கோயிலுக்கும் தீ வைத்தது ஒரு கூட்டம்.

உள்ளூர் பொலிஸாரால் நிலைமையை கட்டுப்படுத்த முடி யாது போகவே, ரேஞ்சர்ஸ் எனப்படும் துணை இராணுவத் தினர் அங்கு சென்று சூறையா டிய கும்பலை அடித்து விரட்டி நிலைமையை கட்டுக்குள் கொண்டுவந்தனர். எனினும் ஆலயம் வன்முறை கும்பலால் முற்றாக சேதமாக்கப்பட்டது.

முன்னதாக, இஸ்லாமிய பள்ளிவாசலின் நூலகம் அருகே 8 வயது இந்து சிறுவன் சிறுநீர் கழித்தார் என்றும், இதைய டுத்து மதநிந்தனை தடை சட் டத்தின் கீழ் அவர் கைது செய் யப்பட்டு நீதிமன்றில் முற்படுத் தப்பட்டார். ஆனால், 8 வயதான சிறுவன் என்பதால் நீதிமன்று அவரை பிணையில் விடுவித்தது.

இந்த நடவடிக்கைக்கு பழி வாங்கும் வகையிலேயே இஸ்லாமியர்களின் கூட்டம் ஒன்று இந்து ஆலயத்தை சூறை யாடியதாகக் கூறப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் ஈடுபட்ட வர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பிரத மர் இம்ரான்கான் உத்தரவிட் டுள்ளார். (ஐ)

# இந்தோனேசியாவில் தொற்றால் 640 மருத்துவர்கள் உயிரிழப்பு!

ஜகார்த்தா, ஓக. 07

இந்தோனேசியாவில் கொரோனா தொற்றால் 640 மருத்துவர்கள் உயிரிழந்தனர் என்று அந்த நாட்டு மருத்துவ கூட்டமைப்பு தெரிவித்துள் ளது.

இவர்களில் 535 பேர் ஆண் மருத்துவர்கள் (83.6 சதவீதம்), 105 பேர் பெண் மருத்துவர்களா வர் (16.4 சதவீதம்). இவர்களில் 347 பேர் பொது மருத்துவர் கள். 284 பேர் சிறப்பு மருத்து வர்களாவர்.

அந்த நாட்டில் மிக அதிக ளவாக கிழக்கு ஜாவா (140), மத்திய ஜாவா (96), ஜகர்த்தா (94), மேற்கு ஜாவா (94) அதி கம் பாதிக்கப்பட்டுள்ளன. இதுவரை இந்தோனேசியாவில் 30 இலட்சத்து 82 ஆயிரத்து 410 பேர்தொற்றுக்கு இலக்காகினர். 80 ஆயிரத்து 598 பேர் உயிரி ழந்தனர். (ஐ)

# தொற்றிலிருந்து மீண்டவர்களின் உடல்நலன் கவலை அளிக்கின்றது!

## உலக சுகாதார அமைப்பு

ஜெனிவா, ஓக. 07

"கொரோனா பாதிப்புக்கு பிறகு ஏற்படும் உடல்நலப் பிரச் னைகள் கவலையளிக்கும் வித மாக உள்ளன", என்று உலக சுகா தார அமைப்பு தெரிவித்துள் ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் தொழில்நுட்ப பிரிவு இயக்குநர் மரியா வான் கெர்கோவ் கூறுகையில், "உல கம் முழுவதும் 20 கோடிக்கும் அதிகமானோர் கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப் பட்டு உள்ளனர். தற்போது தொற்றில் இருந்து மீண்ட பிறகு எழும் உடல்நலப் பிரச்னைகளால் எத்தனை பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர் என் பது குறித்த விவரங்கள் எங்களி டம் இல்லை.

ஆனால், தொற்றிலிருந்து மீண்ட பிறகு எழும் உடல்நலப் பிரச்னைகள் கவலை அளிக்கும் விதமாக உள்ளது. நீண்ட நாள் கோவிட் தொற்றால் பாதிக்கப் பட்டவர்களுக்கு தொற்றிலி ருந்து மீண்ட பிறகு உடல்நல பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதனால், அவர்கள் மருத்துவ உதவி பெற்றுக் கொள்ள வேண் டும். எவ்வளவு நாட்கள் வரை



இந்தப் பிரச்னைகள் நீளும் என, எங்களுக்கு தெரியாது. இது குறித்து மேலும் புரிந்து கொள்ள, ஆராய்ச்சிகளை தீவிரப்படுத்தி உள்ளோம்", என்றார். (ஐ)



# ஆப்கானில் தாக்குதல்: 303 தலிபான்கள் பலி!

காபூல், ஓக. 07

ஆப்கானிஸ்தானில் நேற்றுக் காலை வரையான 24 மணி நேரத்தில் இராணுவம் நடத்திய தாக்குதல்களில் 303 தலிபான் கள் கொல்லப்பட்டனர். 125 பேர் காயமடைந்தனர் என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நங்கர்ஹார், லக்மான், கஜ்னி, பக்திகா, கந்தகார், ஜாபுல், ஹெராட், ஜவ்ஜன், சமங்கன், பரியாப், சார்-இ போல், குண் டூஸ், ஹெல்மண்ட், நிம்ரூஸ், பாக்லான் மற்றும் கபீசா பகுதி களில் இராணுவம் நடத்திய தாக்குதல்களிலேயே தலிபான் கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் அரசாங் கத்துக்கும் தலிபான் பயங்கர வாதிகளுக்கும் இடையே நீண்டகாலமாக போர் நிலவி வருகின்றது. அமெரிக்க படை கள் அங்கிருந்து வெளியேறி யமையை தொடர்ந்து இந்த நிலைமை இன்னும் மோசமாகி யுள்ளது. இதனிடையே கட்டா ரின் டோஹா நகரில் நடத்தப் படும் அமைதிப் பேச்சிலும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிரான்ஸில் தொற்றுக்கு 62 இலட்சம் பேர் இலக்கு!

பாரிஸ், ஓக. 07

கொரோனா தொற்றால் பிரான்ஸ் நாட்டில் 62 இலட் சம் பேர் பாதிக்கப்பட்டுள்ள னர். தொற்றுப் பாதிப்பில் அந்த நாடு ஐந்தாவது இடத்தி லுள்ளது.

இதேநேரம் அந்த நாட்டில், கொரோனா தொற்றால் ஏற் பட்ட உயிரிழப்புக்களின் எண் ணிக்கை ஒரு இலட்சத்து 12 ஆயிரத்துக்கும் மேலாக அதி கரித்துள்ளது.

இதேசமயம், கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்த வர்களின் எண்ணிக்கை 57 இலட்சத்தைக் கடந்துள்ளது. அங்கு 3 இலட்சத்து 89 ஆயிரம் பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா பாதிப்பில் முதலிடத்தில் அமெ ரிக்காவும், இரண்டாம் இடத் தில் இந்தியாவும், மூன்றாவது இடத்தில் பிரேசிலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தொற்று தடுப்பூசி பெறாதவர்களுக்கு சம்பளம், கைபேசி இணைப்பு இல்லை!


இஸ்லாமாபாத், ஓக. 07

தடுப்பூசி பெற்றுக் கொள் ளாதவர்களுக்கு கைபேசி இணைப்பு துண்டிக்கப்படுவது டன், அலுவலகம் செல்லவும் அனுமதி மறுக்கப்பட்டு சம்ப ளமும் வழங்கப்படாது. அத்து டன் பொது மையங்களிலும் நுழையத் தடை விதிக்கப்படும் என்று பாகிஸ்தான் அரசு அறி வித்துள்ளது.

இதனால், தடுப்பூசி மையங் களில் மக்கள் ஆர்வத்துடன் மக்கள் குவிந்து வருகின்றனர். சில தடுப்பூசி மையங்களில் கிலோமீற்றர் கணக்கில் மக்கள் அணிவகுத்துக் காத்திருக்கின் றனர்.

பாகிஸ்தானில் அண்மை நாட்களாக தொற்று மிகவேக மாக அதிகரித்து வருகின்றது. ஆனால், மருத்துவ கட்ட மைப்பு வசதிகள் போதியளவில் இல்லை. அத்துடன் மக்களும் தடுப்பூசி பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால், தடுப்பூசி பெறுவதை அதி கரிக்க அரசு பல்வேறு கெடு பிடிகளை விதித்தது.

அரசின் இந்த நடவடிக்கை யால் ஒரே நாளில் 10 இலட்சம் மக்கள் தடுப்பூசி பெற்றுள்ள னர். 20 கோடி மக்கள் தொகை கொண்ட அந்த நாட்டில் இது வரை 67 இலட்சம் பேர் தடுப் பூசி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



ஈழநாடு



# பார்ஸிலோனாவிலிருந்து விடைபெற்றார் மெஸ்ஸி!

பார்ஸிலோனா, ஓக. 07

21 ஆண்டுகளாக பார்ஸிலோனா அணிக்காக விளையாடிய மெஸ்ஸி அந்தக் கழகத்திலிருந்து விலகியுள்ளார். இது உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு - குறிப்பாக பார்ஸிலோனா ரசிகர்களுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்த அணி வெளியிட்ட அறிக்கையில், “அணி நிர்வாகத்திற்கும் மெஸ்ஸிக்கும் இடையே ஒப்புந்தத்தில் உடன்பாடு ஏற்பட்டிருந்தபோதிலும், நிதி சிக்கல் காரணமாகவும் அணி கட்டமைப்பில் ஏற்பட்ட பிரச்னை உள்ளிட்ட சிக்கல்கள் காரணமாகவும் அதை தொடர முடியாது.



இச்சூழல் காரணமாக, பார்ஸிலோனா அணியில் மெஸ்ஸி தொடர மாட்டார். அணி நிர்வாகம், மெஸ்ஸியின் விருப்பங்கள் நிறைவேறாததால் இரு தரப்பும் வருத்தம் தெரிவித்து கொள்கிறது. மெஸ்ஸி என்ற தனிப்பெரும் விம்பத்துக்காக 50 ஆண்டுகள் அணியை பின்னோக்கி கொண்டு செல்ல முடியாது. ஏனெனில், 100 வருடம் பழமைவாய்ந்த பார்ஸிலோனா அணி எந்த உயர்ந்த வீரரையும் விட மேலானது.”, என்று குறிப்பிட்டுள்ளது.

பார்ஸிலோனா அணியிலிருந்து விலக்கப்பட்ட மெஸ்ஸியை எந்தக் கழகம் ஒப்பந்தம் செய்யப் போகிறது என்பது தொடர்பில் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு நிலவிவருகின்றது.

(ஐ)

# 50 கி.மீ. நடை பந்தயம் போலந்து வீரருக்கு தங்கம்!




ரோக்கியோ, ஓக. 07

50 கி. மீற்றர் நடை பந்தயத்தில் இரண்டாவது முறையாக பங்கேற்று தங்கம் வென்றுள்ளார் போலந்து வீரர் தாவீத் டோமலா.

ரோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான 50 கிலோ மீற்றர் நடை பந்தயம் நேற்ற அதிகாலை நடந்தது.

இந்தப் போட்டியில் தாவீத் டோமலா பந்தய தூரத்தை 3 மணி 50 நிமிடம் 8 செக்கன்களில் பந்தய தூரத்தை கடந்து தங்கப்பதக்கம் வென்றார்.

ஜேர்மனி வீரர் ஜொனதன் ஹில்பெர்ட் வெள்ளி பதக்கத்தையும், கனடா வீரர் எவன் டன்பி வெண்கல பதக்கத்தையும் வென்றனர்.

இந்தப் போட்டியில் தங்கம் வென்ற போலந்து வீரர் 20 கிலோமீற்றர் நடைபந்தயத்திற்காகவே ஒலிம்பிக்கில் பங்கேற்றார். இதற்கு முன்னர் ஒரேஒருமுறைதான் 50 கிலோமீற்றர் நடைபந்தயத்தில் கலந்து கொண்டுள்ளாராம் என்றும் தான் தங்கம் வென்றதை நம்ப முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கும்ளே சாதனையை சமன் செய்தார் அண்டர்சன்!

நாட்டிங்ஹாம், ஓக. 07

டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெட் கைப்பற்றிய பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இந்தியாவின் கும்ளே சாதனையை சமன் செய்தார் இங்கிலாந்தின் அண்டர்சன்.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் நாட்டிங்ஹாமில் நடக்கிறது.

இதில், இந்திய அணித் தலைவர் கோலியை ஜேம்ஸ் அண்டர்சன் ஆட்டமிழக்க செய்தார். இதன்மூலம் இந்தியாவின் சுழல் பந்து ஜாம்பவான் அனில் கும்ளேயின் 619 விக்கெட்கள் என்ற சாதனையை சமன் செய்தார்.

அண்டர்சன் 163 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று இந்த சாதனையை சமன் செய்துள்ளார்.

டெஸ்டில் அதிக விக்கெட்களை கைப்பற்றிய வீரர் என்ற சாதனையை இலங்கையின் முத்தையா முரளிதரன் (800 விக்கெட்கள்) வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# கலை நீச்சல் போட்டியில் தங்கம் வென்றது ரஷ்யா!

ரோக்கியோ, ஓக. 07

கலை நீச்சல் போட்டியில் ரஷ்யாவின் ஸ்வெட்லானா கோல்ஸ்னிச்சென்கோ, ஸ்வெட்லானா ரோமாஷினா ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர்.

ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் நடக்கிறது. இதில் கலை நீச்சல் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இரு இணையராக பங்கேற்கும் இந்தப் போட்டியில் போட்டியாளர்களின் வலிமை, உடல் நளினத்தை வெளிப்படுத்தும் அழகு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

இம்முறை நடந்த போட்டியில் 98.8 புள்ளிகளைப் பெற்று ரஷ்ய வீராங்கனைகள் தங்கப் பதக்கத்தை வென்றனர்.

சீனாவின் ஹூவாங் சூசன், சன் வெனி இணை 96.9 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கத்தையும், உக்ரைனின் மார்டா பெடினா, அனஸ்தேசியா சவ்சுக் 95.6 புள்ளிகளை பெற்று வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஜேம்ஸ் அண்டர்சன், ரொபின்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றியுள்ளனர். (ஐ)



# இந்தியா தடுமாற்றம்!

நாட்டிங்ஹாம், ஓக. 07

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா 177 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்துள்ளது.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 183 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு தொடக்க வீரர்கள் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். இரண்டாம் நாள் ஆட்டத்தில், ரோஹித் சர்மா 36 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் அடுத்து வந்த புஜாரா 4 ஓட்டங்களையும், விராட் கோலி ஓட்டம் எதனையும் பெறாமல் முதல் பந்திலும், அஜிங்கிய ரஹானே 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி 46.4 ஓவர்கள் நிறைவில் 125 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து தடுமாறிய நிலையில், மழை காரணமாக இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் தொடங்கியபோது கே.எல். ராகுல் 57 ஓட்டங்களுடனும், ரிஷப் பந்த் 7 ஓட்டங்களுடனும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர்.

பந்த 25 ஓட்டங்களுடன் ரொபின்சனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

63 ஓவர்கள் நிறைவில் (நேற்று மாலை 5.45 மணி வரை) இந்தியா 5 விக்கெட்கள் இழப்புக்கு 182 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கே. எல். ராகுல் 72, ரவீந்திர ஜடேஜா 24 ஓட்டங்களுடன் தொடர்ந்து களத்தில் இருக்கின்றனர். (ஐ)

# ஒலிம்பிக்கில் சீனா தொடர்ந்தும் முதலிடம்

ரோக்கியோ, ஓக. 07

ரோக்கியோவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் 34 தங்கப் பதக்கங்களுடன் சீனா முதலிடத்தைப் பிடித்துள்ளது. தங்கப் பதக்கங்களின் அடிப்படையில் பின்தங்கிய அமெரிக்கா 31 தங்கத்தை வென்று சீனாவை அண்மித்துள்ளது.

நேற்று மாலை 6 மணி வரையான நிலைவரப்படி, சீனா, 34 தங்கம், 25 வெள்ளி, 17 வெண்கலங்களுடன் 76 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது.

அமெரிக்கா 31 தங்கம், 35 வெள்ளி, 30 வெண்கலங்களுடன் 96 பதக்கங்களை வென்று இரண்டாவது இடத்திலும், போட்டியை நடத்தும் ஜப்பான் 24 தங்கம், 10 வெள்ளி, 15 வெண்கலங்களுடன் 49 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

நேற்று வரை இலங்கை எந்தப் பதக்கத்தையும் வெல்லவில்லை. (ஐ)

# மேல் மாகாணத்தை உடன் முடக்குங்கள்!

**ஜனாதிபதியிடம் மருத்துவ சபை கடிதம் மூலம் கோரிக்கை**

கொழும்பு, ஓக. 07

**மேல் மாகாணத்தில் டெல்டா வைரஸ் பரவல் தீவிரம் அடைந்துள்ள நிலையில் அங்கு முடக்க நிலையை உடன் அறிவிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், இலங்கை மருத்துவ சபை கோரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கை மருத்துவ சபை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"தற்போது நாட்டிலுள்ள பெரும்பாலான மருத்துவமனைகளில் காணப்படுகின்ற தீவிர சிகிச்சைப் பிரிவுகளும், சாதாரண நோயாளர் விடுதிகளும் கொரோனா நோயாளர்களால் நிரம்பி இருக்கின்றன. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்க பொருத்தமான மருத்துவ வசதி களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

தற்போது நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுவதற்கு டெல்டா வகை வைரஸ்தான் காரணம்.

அந்தவகையில் மேல் மாகாணத்தில் வேகமாகப் பரவி வரும் டெல்டா வகை வைரஸ் மிகக் குறுகிய காலத்தில் நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவும் அபாயம் உள்ளது.

ஒன்றுகூடல்களைக் குறைத்தல், முறையான முகக்கவசம் அணிதல், கிருமிநாசினியால் கைகளைச் சுத்தம் செய்தல் மற்றும் சமூக இடைவெளி மூலம் மட்டுமே இந்த வைரஸ் பரவுவதைக் குறைக்க முடியும்.

அதேபோல் தற்போதைய கொரோனா பரவலுக்கு மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியமை, சமூக நிகழ்வுகள், பொழுதுபோக்கு இடங்களைத் திறத்தல், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துதல், வழிபாட்டுத் தலங்களைத் திறத்தல் ஆகியவற்றுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் தான் முக்கிய காரணம்.

இதனிடையே, கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தமது பணிகளை முன்னெடுத்து வருகின்ற சுகாதார தரப்பினர்களும் எதிர்காலத்தில் கொரேனாத் தொற்றால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளார்கள்.

எனவே, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும்" - என்றுள்ளது. (இ)

# கடற்றொழிலாளர்களின் பிரச்னைக்கு உடன் தீர்வு

*அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை*

புத்தளம், ஓக. 07

புத்தளம் மாவட்டம், கற்பிட்டி - கண்டக்குடா பிரதேசத்தில் கூட்டு வலைகளைப் பயன்படுத்தி இறால் பிடிப்பதை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் எதிர் கொண்ட பிரச்னை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் ஏற்பாட்டில் நேற்று பிரதேச கற்றொழிலாளர்கள் சந்தித்துக் கலந்துரையாடியதைத் தொடர்ந்து குறித்த தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற குறித்த சந்திப்பில், கடந்த 25 வருடங்களுக்கும் அதிகமாக குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் கூட்டு வலையைப் பயன்படுத்தி இறால் பிடிப்பதை வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர்.

இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் கடற்றொழில் திணைக்களத்தால், அனுமதியற்ற முறையில் குறித்த தொழில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சுமார் 400 இற்கும் மேற்பட்ட வலைகளை அகற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்களால் கடற்றொழில் அமைச்சரிடம் எடுத்துக்கூறப்பட்டது.

இதையடுத்து, சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்ட கடற்றொழில் அமைச்சர், பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில்கொண்டு, கடல் வளங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நிபந்தனைகளுடனான அனுமதியை வழங்குமாறு அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். (இ)

## மரண அறிவித்தல்



மலர்வு 18 - 04 - 1953

உதிர்வு 05 - 08 - 2021

### திருமதி கமலாதேவி இரவீந்திரன் (கிளி)

நெடுந்தீவு, நடுக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் இல.57, உதய நகர் கிழக்கு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி இரவீந்திரன் (கிளி) நேற்றுமுன்தினம் (05.08.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டிசரவணமுத்து – சேதுப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகளும், சுப்பிரமணியம் – மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், இரவீந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிரிசன் மற்றும் டின்சி, தர்சன் (ஆசிரியர் – கிளி/கரியாலை நாகபடுவான், இல.02, அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகலட்சுமி (தங்கம்), சந்திரபாலன் (லண்டன்), நல்லையா (மல்லாவி), பேரின்பநாதன் (யா/புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம்), பாக்கியலட்சுமி (வசந்தி–நெடுந்தீவு) ஆகியோரின் சகோதரியும், அருனேந்திரன் (கனடா) அவர்களின் அன்பு மாமியாரும், டொன்வொஸ்கோ, வசந்தகுமாரி (லண்டன்), மல்லிகாதேவி, சசிகலா (ஆசிரியை), கிருபாவரதன் (ப.நோ.கூ.ச கிளைமுகாமையாளர் – நெடுந்தீவு), காலஞ்சென்ற நவமணி, குணரத்தினம், குணமணி, யோகமணி, மனோன்மணி மற்றும் இராஜகுலேந்திரன், பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.08.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் திருநகர் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்தஅறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தொடர்புகளுக்கு:**
*0773712807, 0778590004*
*உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.*

தகவல்:
**குடும்பத்தினர்.**



# மாத்தளை கார்த்திகேசு காலமானார்

*மாத்தளை, ஓக. 07*

*மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல எழுத்தாளரும், நாடகக் கலைஞருமான மாத்தளை கார்த்திகேசு நேற்று தனது 82 ஆவது வயதில் காலமானார்.*

*1939 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பிறந்த இவர், மாத்தளை விஜய கல்லூரியிலும், கிறிஸ்தவக் கல்லூரியிலும் கல்வி பயின்றவர். பாடசாலை நாடகப் போட்டிக்கு நாடகம் தயாரித்து மேடையேற்றி பரிசு பெற்றவர். அதன் பின்னர் நாடகத்துறை மாத்திரம் அல்லாமல் எழுத்துத் துறையிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தவர்.*

*இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் நாடகக் குழு 1972ஆம் ஆண்டின் சிறந்த நாடகத்துக்கான கௌரவத்தினை "காலங்கள் அழுவதில்லை" என்ற அவரது நாடகத்துக்கு வழங்கியது. இலங்கை மத்திய வங்கி 1974,ல் நடத்திய நாடக விழாவில், "காலங்கள் அழுவதில்லை" நாடகத்துக்கு சிறந்த நாடகப்பிரதி - சிறந்த நாடகம் - சிறந்த நடிப்பு ஆகிய மூன்ற பரிசுகள் வழங்கப்பட்டன.*

*மேடை நாடகத்துறையில் இருந்து தொலைக்காட்சிக்கும் அதைத்தொடர்ந்து திரைப் படத்துறைக்கும் காலடி வைத்து சுவடு பதித்தவராவர்.*

## மரண அறிவித்தல்



மலர்வு 25 - 07 - 1933

உதிர்வு 03 - 08 - 2021

### திருமதி நேசரெத்தினம் தம்பிராசா

எருவில் கிழக்கு பாரதிபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசரெத்தினம் தம்பிராசா 03.08.2021 செவ்வாய்க் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை – சங்குவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலிப்போடி – செம்பகணாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சந்திரசேகரம், சீதாலெட்சுமியின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னத்தம்பி, கனகரெத்தினம், இராசதுரை, இளையதம்பி, தெய்வானை, குணநாயகி மற்றும் குமாரப்போடி, பொன்னம்மா, சௌந்தரி, பூபதி, சீவரெத்தினம், காந்தமலர் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, ஏகாம்பரம், மைலிப்போடி, ஆறுமுகம், யோகராஜா மற்றும் செல்வராசா, வையாளிப்போடி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, நீலவேணி, மகேஸ்வரன் காலஞ்சென்றதில்லேஸ்வரன், செந்தூர் (London), பத்மினிதேவி, கயிலைநேசன், கதிர்காமவேல் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் இராசநாயகி, வேதநாயகி, அன்னலெட்சுமி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், செல்வநாயகம், கிருபையம்மா, ஐயாத்துரை, புஸ்பவதி, அருணா (London), ஈஸ்வரன், உசாநந்தினி, சுகிதாசினி, மகேந்திரன், உதயகுமார், பேரின்பராசா ஆகியோரின் அன்புமாமியாரும், ஜீவராணி (ஆசிரியர் – வம்மிவட்டுவான்,வாகரை) தவேந்திரன் (தாதிய உத்தியோகத்தர் – களு வாஞ்சிகுடி), தேவரூபன் (விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர்), நிமல்ராஜ்,குணராஜ், ஜதுஸ்ராஜ், ரூபகாந்தன், துயந்தன்,கிருஸ்ரின் (மாவட்டநீதிமன்றம் – திருகோண மலை), வினேஸ்காந், சிவகுமார், சுகந்தினி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும்,வேதரூபி, துஷாந்தினி, உருத்திராங்கரன், குணாநிதி, தர்சினி,தினேகா,பிரியா, லக்சிகா, ஆஹ்ஹாஸ் பொருளியலாளர் London), அக்ஷயா (London), அஸ்வினி, டசாந், சிவசுப்பிரமணியம், துசாந்தினி, நிதர்சினி (தென்னை அபிவிருத்திஉத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், திவானு,பவிஷாந், ஆதிஷா, ஜஸ்மிகா, வவிசனா, லக்ஷித், லஸ்விந், கரிசினி, அக்ஷாத், திபிக்ஷா, சஸ்விதா, கிந்துஜன் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## இராமேஸ்வரம்...

அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்ற பாராளுமன்றத்தில் வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சு சார்ஆலோசனைக் குழுக் கூட்டத்தி லேயே இந்தத் தகவல்களை ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள மக்களுக்கு அவர்களின் சொந்தக் காணிகளை மீள வழங்குவது உள்ளிட்ட நடவடிக்கைகள் முடிந்தளவு முன்னெடுக் கப்பட்டிருப்பது தொடர்பாகவும் இவை தொடர்பில் சர்வதேச சமூகத்தை தெளிவு படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப் பது தொடர்பிலும் பாராளுமன்றத்தில் நடைபெற்ற வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கவிந்து குமாரதுங்க, பிரித்தானிய பாராளுமன்றத்தில் தற்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள வெளிநாட்டு நடவடிக்கைகள் சட்டத்தின் ஊடாக அந் நாட்டின் யுத்த வீரர்கள் வெளிநாடுகளில் ஐந்து வருடங்களுக்கு முன்னர் மேற் கொண்ட யுத்தக் குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறான பின்னணியில் இலங்கை படைவீரர்கள் தமது தாய்நாட்டைப் பாதுகாக்க எடுத்த நடவடிக்கையின் போது கூட மனித உரிமைகள் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது நியாயமற்றது என்றும், இந்நாட்டுப் படைவீரர்களின் நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

தேசிய அரசாங்கங்களின் இறைமைக்கு எதிராக மனித உரிமை பயன் படுத்தப்படும் விடயத்தில் உலகத்துக்கே எடுத்துக்காட்டாக இருக்கும் வகையில் படைவீரர்கள் தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டைஉலகத்துக்கு அறிவிக்குமாறும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே, இதுதொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும், இந்நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள மக்களுக்கு அவர்களின் சொந்தக் காணிகளை மீள வழங்குவது உள்ளிட்ட நடவடிக்கைகள் முடிந்தளவுமுன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும், இவை தொடர்பில் சர்வதேச சமூகத்தை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுத் திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர் இம்மாதம் 15ஆம் திகதி பதவியேற்கவிருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. தமிழ்நாட்டின்இராமமேஸ்வரத்துக்கும் தலை மன்னாருக்கும் இடையில் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் சாணக்கியன் இராமாணிக்கம் எம்.பி. எழுப்பிய விடயத்துக்குப் பதிலளித்த வெளிநாட்டு அமைச்சின் செயலாளர், இந்த விடயத்துக்கு இந்தியத் தரப்பில் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் துறைமுக அமைச்சு இது தொடர்பில் இறுதி முடிவுக்கு வரவில்லையென்றார்.

## மேலும் 98 பேர்...

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 919 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 98 பேரில் 54 ஆண்களும், 44 பெண்களும் அடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக் களம் தெரிவித்துள்ளது. (இ)

## சட்ட விரோதமான...

மான நபர்கள் என கருதுபவர்களை வெள்ளை வானில் கடத்தும் கலாசாரம் நிறைவேற்று அதிகாரத்தின் கட்டளைக்கு அமைய முன்னெடுக்கப்படுகின்றது எனக்குற்றம்சாட்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான எம்.ஏ.சுமந்திரன். பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்ற குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த சுமந்திரன் மேலும் கூறுகையில்,

"அரசு தற்போது கையாளும் சட்டதிட்டங்கள் மிக மோசமானவை சட்ட விரோதமான கைதுகள் இடம்பெற்று வருகின்றன . நாட்டின் சட்டம் ஒழுங்கு சீரழிக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறான நிலையில் சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஒருவர் எதற்கு என்ற கேள்வி எழுகின்றது.

மாணவர்கள், தொழிற்சங்கங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், விரிவுரையாளர்கள் என சகலரையும் பொலிஸார் வலுக்கட்டாயமாக கடத்தி செல்கின்றனர். சீருடையில் இல்லாத பொலிஸார் இவ்வாறு செயல்படுகின்றனர். இது எவ்வாறானது என்றால் அரசாங்கம் தனது வெள்ளைவான் கலாசாரத்தை மீண்டும் நினைவு படுத்துவதாகவே கருதுகின் றோம். இதற்கு முன்னர் நாம் வெள்ளை வான் கலாசாரத்தை கையாண்டோம், அதனை மீண்டும் செய்வோம் என்பதை மக்களுக்கு நினைவுபடுத்துகின்றது. பழைய நினைவுகளை எமக்கு மீண்டும் நினைவுபடுத்தி மக்களை அச்சுறுத்த நினைக்கின்றீர்கள்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவும் சபையில் இதனையே நினைவுபடுத்தினார், இன்று பொலிஸார் செய்வதை போன்று நாளை வேறு எவரும் இவ்வாறான கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபடலாம். கப்பம் கேட்பதற்கான பாதாள கோஷ்டிகள் இதே முறைமையை கையாளலாம். உங்களுக்கு இதனை கூறவேண்டிய அவசியம் இல்லை. 11 மாணவர் கடத்தல் விவகாரங்கள் என்பன உங்களுக்கு நன்றாக தெரியும். அதே விதமாக, சந்தேகத்திற்கு இடமான நபர்கள் என கருதுபவர்களை வெள்ளை வானில் கடத்தும் கலாசாரத்தை நிறைவேற்று அதிகாரத்தின் கட்டளைக்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

ஒருபுறம் நாடு கொரோனா நிலைமைகளில் பாதிக்கப்பட்டுள்ளது, இலங்கை சுறுப்புப் பட்டியலில் போடப்பட்டுள்ளது, நாட்டில் டெல்டா அச்சுறுத்தல் நிலை உள்ளது, மறுபக்கம் இதனை சாதகமாக வைத்துக்கொண்டு மக்களை அடக்கி ஒடுக்கும் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றீர்கள். நாட்டில் சட்டம் ஒழுங்கு நாசமாக்கப்பட்டு வருகின்றது", என்றார்.

## கடுமையான...

கொரோனா வைரஸ் தொடர்பான இறப்புகள் மற்றும் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிவேகமாக அதிகரிக்கும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வழக்கத்திற்கு மாறாக அதிக எண்ணிக்கையில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

அடுத்த இரண்டு வாரங்களில் தினசரி நோய்த்தொற்றாளர்கள் அதிக எண்ணிக்கையில் அதிகரிக்கும் என்று சுகாதார அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள். ஒரு கட்டத்தில் வைத்தியசாலைகள் கையாள முடியாது.

கடந்த சில நாள்களில் எட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகள் உச்சத் திறனுக்கு நெருக்கமாக இருப்பதால், வைரஸ் பரவுவதைத் தடுக்க மக்களின் ஆதரவைக் கேட்டு, பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளோம்.

கோவிட் -19 தொடர்பான இறப்பு விகிதம் அதிகரிக்க மொத்த தடுப்பூசிகளின் குறைவு ஒரு காரணம். பெரும் பாலான இலங்கையர்கள் முதல் டோஸை மட்டுமே பெற்றுள்ளனர்.

இரண்டு அளவுகளிலும் தடுப்பூசி போடப்பட்டவர்கள் மட்டுமே வைரஸிலிருந்து பாதுகாப்பதாகக் கருத முடியும். முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட நபர்கள் வைரஸ் பாதித்தாலும் அவர்கள் அதன் நோய் கடத்திகள் என்று மட்டுமே அர்த்தம்" என்றும் பொதுச் சுகாதார பரிசோகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

## மூன்றாவது...

ளார்.

கோவிட் நோய்த் தொற்று அறிகுறிகள் காரணமாக, கொழும்பு உள்ளிட்ட சில பிரதான நகரங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நாளாந்தம் வருகை தருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு வருகை தருகின்ற நோயாளர்களின் நோய்த் தொற்றை உறுதி செய்துகொள்ளும் போது ஏற்படுகின்ற நெரிசல் காரணமாக, அவர்கள் சங்கடங்களுக்கு ஆளாகக்கூடாதென, ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சில பிரதான நகரங்களுக்கு அண்மையில், மேலதிக சிகிச்சை நிலையங்கள் பலவும், கடந்த மாதங்களுக்கு முன்னரே தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. எந்தவோர் அவசர நிலையிலும் தொற்றாளர்கள் சங்கடத்துக்கு ஆளாவதைத் தடுப்பதற்காகவே அந்நிலையங்கள் தயார்ப் படுத்தப்பட்டுள்ளன.

தடுப்பூசி ஏற்றல் மற்றும் எதிர்காலச் செயல்திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடும் கோவிட் தடுப்பு விசேட குழுவுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டாவது தடுப்பூசியை வழங்குகின்ற எந்தவொரு மத்திய நிலையத்திலும், 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான முதலாவது தடுப்பூசியை வழங்குவதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும், செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் இரண்டு தடுப்பூசிகளையும் வழங்கக் கூடிய அளவுக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. மூன்றாவது தடுப்பூசியை வழங்க வேண்டி ஏற்பட்டாலும், அதற்கும் அரசாங்கம் தயா ராக உள்ளது. இருப்பினும், நோய்த் தொற்று பரவுவதைத் தடுப்பதற்காகப் பொதுமக்கள் வழங்குகின்ற பங்களிப்பு குறைந்துள்ளமை கவலைக்குரியதாக உள்ளதென, விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன சுட்டிக்காட்டினார்.

## நாடு மீண்டும்...

கொரோனா தொற்று மிகவேகமாக அதிகரித்து வரும் நிலையில் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் தேசிய கோவிட் கட்டுப்பாட்டு செயலணி முக்கிய கலந்துரையாடல் ஈடுபட்டது.

இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி நாட்டை முடக்குவதில்லை என்றும் புதிய கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவது எனவும் அறிவிக்கப் பட்டது.

இதன்படி, திருமண நிகழ்வு ஒன்றில் 500 பேருக்கு மேற்பட்ட இருக்கைகள் கொண்ட மண்டபங்களில் 150 பேரும், 500 பேருக்குக் குறைந்த இருக்கைகள் கொண்ட மண்டபங்களில் 100 பேரும் அதிகபட்சமாகக் கலந்துகொள்ள முடியும். இதேபோன்று மரண சடங்கு ஒன்றில் அதிகபட்சமாக 25 பேரே பங்கேற்க முடியும்.

இந்த மாதத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்ட அரச சேவைகள் அனைத்தும் செப்ரெம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

தினசரி வேலைக்கு அழைக்கப்படவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கையை முடிவு செய்யும் அதிகாரம் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதேநேரம், அரச அலுவலகங்களின் பணிகளை முன்னெடுக்க அத்தியாவசியமானவர்களை மட்டும் அழைக்குமாறும் அலுவலகங்களில் மேலதிக ஊழியர்களை வீடுகளில் இருந்து பணியாற்றுமாறும நிறுவனப் பிரதானியே தீர்மானிக்க வேண்டும் - என்றும் ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். (ஐ)

## சந்நிதி அன்னதான...

தங்கியுள்ள யாசகர்களுக்கு பொதி செய்யப்பட்ட உணவை வழங்க மோகன் அன்னதான மடத்துக்கு அனுமதியளிக் கப்பட்டிருந்தது.

எனினும், நேற்று வெள்ளிக்கிழமை ஆலயத்தில் பெருமளவான பக்தர்கள் வந்ததுடன், மோகன் மடத்தில் அன்ன தானத்தில் கலந்துகொண்டனர். தகவலறிந்து பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையில் சுகாதாரப் பிரிவினர், பொலிஸார் அங்கு சென்றனர். இதன் போது முக்கவசம் அணியாமல், சுகாதார விதிகளை பேணாமல் பலர் கலந்து கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் மோகன் மண் டபம் எதிர்வரும் 20ஆம் திகதி வரை- 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள் ளது.

அத்துடன், ஆலயத்தில் தங்கியுள்ள யாசகர்களுக்கு உணவளிக்கும் பொறுப்பு வெறொரு மண்டபத்துக்கு வழங்கப்பட் டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில்...

கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில், 65 பேருக்கு தொற்று உறுதிப்படுத் தப்பட்டது.

இதன்படி, பருத்தித்துறை ஆதார மருத் துவமனையில் 11 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 11 பேருக்கும், மானிப்பாய் பிரதேச மருத் துவமனையில் 9 பேருக்கும், தெல்லிப் பழை ஆதார மருத்துவமனையில் 6 பேருக் கும், சாவகச்சேரி ஒருவருக்கும் என யாழ். மாவட்டத்தில் 38 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேபான்று முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், முல்லைத் தீவு பொது மருத்துவமனையில் ஒருவருக் கும் என 8 பேரும், கிளிநொச்சி மாவட்டத் தில் பளை பிரதேச மருத்துவமனையில் 3 பேருக்கும், அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், வட் டக்கச்சி பிரதேச மருத்துவமனையில் ஒரு வக்கும் என ஐவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

மன்னார் பொது மருத்துவமனையில் 6 பேரும், வவுனியா பொது மருத்துவ மனையில் ஒருவரும், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப் பட்டனர்.

இதேசமயம், யாழ். பல்கலைக்கழகத் தில் நேற்று 269 பேரின் மாதிரிகள் பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட் டன. இதில் 30 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி, வேலணை சுகாதார மருத் துவ அதிகாரி பிரிவில் 16 பேருக்கும், யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதி காரி பிரிவில் 7 பேருக்கும், உடுவில் சுகா தார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக் கும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 2 பேருக்குமாக 28 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, மன்னார் கடற்படை முகா மில் இருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## நேற்று 2, 792...

மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 24 ஆயிரத்து 221 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற் றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,942 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் இதுவரை நாட் டில் கொரோனாத் தொற்றிலிருந்து குண மடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 88 ஆயிரத்து 307 ஆக உயர் வடைந்துள்ளது. (இ)

## ரஞ்சனுக்கும்...

தித் தொடர்பாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் ரஞ்சன் ராமநாயக் கவின் நிலை கவலைக்கிடமாக இல்லை எனவும் அவர் கூறினார்.

ஈழநாடு
Eelanadu

# அரசிடமிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது

## சபையில் ஹரின் பெர்னாண்டோ எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 07

**நாட்டைப் பாதுகாக்கவெனக் கொண்டுவரப்பட்ட வீரரிடம் இருந்து இப்போது நாட்டைப் பாதுகாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

"அரசு வெற்றி பெற்று இன்றுடன் (ஓகஸ்ட் 6 )ஒருவருடம் ஆகின்றது. இப்போது நாடு என்ன நிலைமையில் இருக்கின்றது? சௌபாக்கியம் இல்லாத நிலைக்கு நாடு போயுள்ளது. மக்கள் செத்து வீழ்கின்றனர் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. மக்கள் செத்துக்கொண்டிருக்கையில், வைத்திய சாலைகளில் கட்டில்களுக்குக் கீழே மக்கள் இருக்கும் இந்த நேரத்தில் நாங்கள் இந்தப் பாராளுமன்றக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

இந்த பாராளுமன்றத்தின் மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹண திஸாநாயக்க, திஸ்ஸ குட்டியாராச்சி உள்ளிட்டோருக்குக் கொரோனா தொற்றியுள்ளது. இன்னும் பலர் கொரோனாத் தொற்றுடன் இருப்பர். இந்த நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் போட்டுக்கொண்ட கொரோனாத் தடுப்பூசி தொடர்பில் அரச கட்சியினர் கேள்வி கேட்கின்றனர். நான் சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியையே போட்டுக்கொண்டுள்ளேன்.

இந்த அரசு சௌபாக்கியம் தொடர்பில் ஒரு வருடத்துக்கு முன்னர் கூறியது. நாட்டைப் பாதுகாக்கும் வீரரைக் கொண்டு வருவோம் என்று கூறி ஒரு வீரரைக் கொண்டு வந்தனர். இப்போது அந்த நாட்டைக் காக்கும் வீரரிடம் இருந்து நாட்டைக் காக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

சீனாவில் 1450 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். இலங்கையில் 22 மில்லியன் பேரே இருக்கின்றனர். இந்நிலையில் எமது நாட்டில் கொரோனா மரண எண்ணிக்கை 4 ஆயிரத்து 700 ஐ விடவும் அதிகமாகும். ஆனால், சீனாவில் 4 ஆயிரத்து 636 பேர் மட்டுமே உயிரிழந்தனர். இதன்படி சீனாவை விடவும் இலங்கையில் மரணங்கள் அதிகரித்துள்ளன.

இதேவேளை, இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் பெற்றோல் விலையைக் குறைக்க முடியவில்லை. ஆசிரியர் சம்பளத்தை அதிகரிக்க முடியவில்லை. மத்திய வங்கி திருடர்களைப் பிடிக்க முடியவில்லை. உயிர்த்த ஞாயிறு தினக் குற்றவாளிகளைப் பிடிக்க முடியவில்லை. சுகாதாரத்தைக் கொடுக்க முடியவில்லை. இவர்கள் செய்தது ஒன்றுமே இல்லை. இந்த நேரத்தில் நாட்டைக் காக்கக் கொண்டு வரப்பட்டவருக்கும் அதனைச் செய்ய முடியாது போயுள்ளது. அவரும் முடியாதவரே" - என்றார். (இ)

கொரிய வேலைவாய்ப்புகளுக்கு

# இலங்கையரை அனுப்பும் நடவடிக்கையில் தாமதம்



கொழும்பு, ஓக. 07

"கொரோனா சூழல் காரணமாக கொரிய வேலை வாய்ப்புக்களுக்கு இலங்கையர்களை அனுப்பும் நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனை விரைவுபடுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட் டுள்ளன."

- இவ்வாறு வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இது தொடர்பில் ஏற்கனவே இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இலங்கையர்களுக்கு விவசாயத்துறையில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்குக் கொரியத் தூதுவர் விசேட யோசனையை முன்வைத்திருக்கின்றார்.

இருந்தபோதும் தற்போது நிலவும் கொரோனா சூழல் காரணமாக இந்த நடவடிக்கை காலதாமதம் அடைந்துள்ளபோதும் இதனை விரைவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" - என்றார். (இ)

# நியாயமான விலையில் அத்தியாவசிய பொருட்களை கிடைக்க நடவடிக்கை

## அரசாங்க கணக்குகள் குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, ஓக. 07

கூட்டுறவு முறையை விருத்தி செய்து நாடு முழுவதும் நியாயமான விலையில் அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க கணக்குகள் குழுவின் (கோபா) தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர்நாயகத்தின் அறிக்கை மற்றும் செயற்பாடுகளை மதிப்பாய்வு செய்வதற்கு அரசாங்க கணக்குகள் குழு பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

கடந்த காலங்களில் கூட்டுறவு முறைமை இந்நாட்டில் மிகவும் செயற்திறனாக செயற்பட்டதாக சுட்டிக் காட்டிய பேராசிரியர் இன்று அந்த நிலைமை இல்லாமல் போயுள்ளதாக குறிப்பிட்டார். விசேடமாக விவசாய கூட்டுறவு மற்றும் நுகர்வோர் கூட்டுறவுக்கிடையிலான தொடர்பை அதிகரித்து ஒரு சில உற்பத்திகளை நேரடியாக மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதன் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக்காட்டினார். அதே போன்று, பருப்பு, சீனி, அரிசி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை முறையான வேலைத்திட்டமொன்றின் மூலம் நியாயமான விலைக்கு வழங்க முடியும் என தான் நம்புவதாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

தற்போதைய சட்ட ரீதியான பின்னணியில் அதனை உடனடியாக செயற்படுத்துவதில் அசௌகரியங்கள் காணப்படுவதாக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் புதிய சட்டங்களை தயாரித்து உரிய தரப்பினருக்கு பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், கோபா குழுவுக்கும் இந்த வரைபுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர். இதன்மூலம் மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசுக்கிடையில் ஏற்பட்டுள்ள ஒரு சில முரண்பாடுகளை குறைக்கவும், ஊழல் மோசடிகளின் போது அதிகாரிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பில் விளக்குவதற்கும் நடவடிக்கை எடுத்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஏற்கனவே வினைத்திறனான முறையில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இதன்போது கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். கூட்டுறவு தொடர்பான சட்டத்தின் விடயங்கள் அரசியலமைப்பிலிருந்தே வருவதால் புதிய சட்டமூலத்தின் பணிகள் சற்று கடினமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார். எனினும் அதனை, துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்கஅமைச்சர் தெரிவித்தார்.

அதேபோன்று, அவுஸ்திரேலியாவிலிருந்து சிவப்பு பருப்பு மற்றும் இந்தியாவிலிருந்து சீனி இறக்குமதி செய்வதற்கு பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகவும், அந்த பேச்சுகள் வெற்றியடைந்தால், கூட்டுறவு மூலம் அவசரமாக சலுகை விலையில் சீனி மற்றும் பருப்பு என்பவற்றை வழங்க முடியும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மரண அறிவித்தல்

மலர்வு 09 - 07 - 1975



உதிர்வு 22 - 07 - 2021

## கந்தன் பிள்ளையார்

கைதடியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Kingston upon Hull ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் பிள்ளையார் கடந்த (22.07.2021) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன் - சின்னதங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், கிருபராணி(இலங்கை) அவர்களின் அன்புக் கணவரும், பமிலா (இலங்கை) அவர்களின் அன்புத் தந்தையும், கதிர்காமநாதன் (லண்டன்), திரேந்திர குமார் (லண்டன்), சரோயா இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நிரோஜா ஸ்ரீ, தனுசியா ஸ்ரீ, லோகி ஆகியோரின் அன்பு மாமாவும், சுமதி (லண்டன்), ராஜா, தயாளன் (லண்டன்), ஈசன்(லண்டன்), செல்வம் (லண்டன்), ஸ்ரீ (சுவிஸ்), ராஜன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜன்(ஐக்கிய அமெரிக்கா), சுசி(சுவிஸ்), பிருந்தா (சுவிஸ்), ரசி (சுவிஸ்), சுதாகரன் (ஜேர்மனி), விக்கி (ஜேர்மனி), கிருஷ்ணப்பிள்ளை (சுவிஸ்), சரோ (சுவிஸ்), மல்லிகா (லண்டன்), கனகாம்பிகை (ஜேர்மனி) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

**கிரியை**
Monday, 09 Aug 2021 1:30 PM - 3:30 PM
Flanders Community Centre 116 Napier Rd, London E6 2SG, United Kingdom

**தகனம்**
Monday, 09 Aug 2021 4:00 PM - 4:30 PM
City of London Cemetery & Crematorium Aldersbrook Rd, London E12 5DQ, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**பாலேந்திரா - மகன்**
**Mobile : +61490778630**

தகவல்
**குடும்பத்தினர்.**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-பண்டிதர் திருநாவுக்கரசு



7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - மறு ஒளிபரப்பு


**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- உன்னைத்தேடி
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை - நாடளாவிய ரீதியில் அதிபர் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் தொழில்சங்க போராட்டம்



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்-இசை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமரலை)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
07.00 மணி : அன்ரியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு